இலங்கையின் முதல் தமிழ்க் கத்தோலிக்க வார ஏடு

# பாதுகாவலன்

PAATHUKAVALAN

Registered in the Department of Post of Sri Lanka No. QD/119/News/2021. Founded 19 Feb.1876

St.Joseph's Catholic Press, 360 Main Street, Jaffna, Sri Lanka. Tel: 021 - 222 2378 | Fax: 021 - 222 9041 | E-mail: editorkavalan@gmail.com, ISSN 1391-7633

மலர் : 145 | இதழ் : 12 | திகதி : 19.09.2021 | விலை : 30.00

## இலங்கை ஆயர் பேரவை ஏற்பாட்டில் ஒக்ரோபர் மாதம்

# நாடளாவிய திருச் செபமாலைத் திருயாத்திரை

### மாத்தறை மாதா திருத்தலத்தில் ஆரம்பம் – மடுத்திருப்பதியில் நிறைவு

எம்மைச் சூழ்ந்துள்ள தீமைகளிலிருந்து விடுதலைபெற இலங்கைத் திரு அவை முழுவதும் இணைந்து மரியன்னையின் மாதமாகிய ஒக்ரோபர் மாதத்தில் அன்னையின் பரிந்துரையை மன்றாடி நாடளாவிய ரீதியில் மெய்நிகர் வழியிலான திருச்செபமாலை திருயாத்திரையை நடாத்துவதற்கான ஒழுங்குகளை இலங்கை ஆயர் பேரவை ஏற்பாடு செய்துவருகிறது. தொலைக்காட்சி அலைவரிசைகள், இணையத்தளங்கள் மற்றும் தொலைத்தொடர்பு சாதனங்களூடாக நடாத்தப்படவிருக்கும் இத் திருச்செபமாலைத் திருயாத்திரையில் இலங்கையின் எல்லா மறைமாவட்டங்களிலுமுள்ள அனைத்து இறைமக்களும் பங்குகொண்டு மரியன்னையின் பரிந்துரையை மன்றாடுமாறு ஆயர் பேரவை அழைப்பு விடுத்துள்ளது.

ஒக்ரோபர் மாதம் 02ம் திகதி காலி மறைமாவட்டத்திலுள்ள மாத்தறை மாதா திருத்தலத்தில் ஆரம்பமாகும் திருச் செபமாலை திருயாத்திரை ஒக்ரோபர் மாதம் 30ம் திகதி மன்னார் மறைமாவட்டத்தின் மடுத் திருப்பதியில் இறுதிச் திருச்செபமாலைத் தியானத்தின் பின்னர், ஒக்ரோபர் 31ம் திகதி அனைத்து மறைமாவட்டங்களிலும் ஒப்புக் கொடுக்கப்படும் திருப்பலிகளோடு நிறைவு பெறும்.

இத் திருச்செபமாலைத் திருயாத்திரை அனைத்து மறைமாவட்டங்களிலுமுள்ள தேர்ந்தெடுக்கப்பட்ட மரியன்னையின் திருத் தலங்களினூடாக ஒக்ரோபர் மாதம் முழுவதும் பயணிப்பதற்கான ஏற்பாடுகள் ☞ 11

# யாழில் சுவிட்சலாந்து தூதரக அலுவலகம் மீண்டும் திறக்கப்பட ஆவன செய்யுங்கள்

### இலங்கையின் சுவிட்சலாந்து தூதரிடம் வடக்கு – கிழக்கு ஆயர் மன்றம் கோரிக்கை

யாழ்ப்பாணத்தில் இயங்கி வந்து பின்னர் தற்காலிகமாக மூடப்பட்ட சுவிட்சலாந்து தூதரக அலுவலகத்தை மீண்டும் திறக்க ஆவன செய்யுங்கள் என்று இலங்கையின் சுவிட்சலாந்து தூதரிடம் வடக்கு-கிழக்கு ஆயர் மன்றம் கோரிக்கை விடுத்துள்ளது. யாழ்ப்பாணம், திருகோணமலை, மட்டக்களப்பு மற்றும் மன்னார் மறைமாவட்டங்களின் ஆயர்கள் கையொப்பமிட்டு இலங்கையின் சுவிட்சலாந்து தூதருக்கு அனுப்பிய கடிதத்தில் மேற்படி வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

யுத்தம் முடிவுக்கு வந்து பன்னிரண்டு ஆண்டுகள் நிறைவுற்றபோதும் பல்வேறு நெருக்கடிகளுக்கு முகம் கொடுக்கவேண்டியுள்ள வடக்கு-கிழக்கு பிரதேசத்தில் சர்வதேச நிறுவனங்கள், மனித உரிமைக் கண்காணிப்பாளர்கள், இராஜதந்திர அதிகாரிகளின் பிரசன்னம் மிகவும் அவசியமாக இருக்கின்ற இச்சந்தர்ப்பத்தில் சுவிட்சலாந்து தூதரகத்தினுடைய அலுவலகத்தின் பிரசன்னம் மிகவும் முக்கியமானது என்பதை ஆயர் மன்றம் சுட்டிக் காட்டியுள்ளது.

அதே வேளையில், கடந்த காலங்களில் சுவிஸ் அலுவலத்தின் பன்முகப்படுத்தப்பட்ட பணிகளினால் இலங்கை நாடும் குறிப்பாக வடக்கு-கிழக்கு மக்களும் அடைந்த நன்மைகளுக்காக இக்கடிதத்தில் நன்றி தெரிவிக்கப்பட்டுள்ளது. ☞ 11

# மாங்குளத்தில் இறைதியான இல்லம்



வன்னிப் பெருநிலப்பரப்பில், மாங்குளம் குழந்தை இயேசு கிராமத்தில் அமையப் பெறவுள்ள இறைதியான இல்லத்திற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு புனித மரியன்னையின் பிறப்பு விழாவாகிய 08.09.2021 புதன்கிழமை அன்று இடம்பெற்றது.

அருட்திரு E. S. C. மரியதாஸ் அடிகளின் ஒழுங்குபடுத்தலில் நடைபெற்ற இந்நிகழ்வில் யாழ். மறைமாவட்டக் குருமுதல்வர் அருட்கலாநிதி P. J. ஜெபரட்ணம் அடிகள் கட்டட அமைவிடத்தை ஆசீர்வதித்து இறைதியான இல்லத்திற்கான அடிக்கல்லை நாட்டினார். முல்லைத்தீவு மறைக்கோட்ட குரு முதல்வர் அருட்திரு A. P. அன்ரனிப்பிள்ளை அடிகளும், முன்னை நாள் குருமுதல்வர் அருட்பணி A. J. யாவிஸ் அடிகளும் மற்றும் நல்லாயன் சபை அருட்சகோதரிகளும் கலந்து இந்நிகழ்வைச் சிறப்பித்தார்கள்.

# அமலமரித்தியாகிகளுக்கு புதிய குருக்கள் மூவர்



யாழ். மாகாண அமலமரித்தியாகிகள் குழுமத்தின் மூன்று திருத்தொண்டர்கள் 11.09.2021 சனிக்கிழமை அன்று புதிய குருக்களாக யாழ். ஆயர் பேரருட் கலாநிதி ஜஸ்ரின் ஞானப்பிராகாசம் ஆண்டகை அவர்களால் திருநிலைப் படுத்தப்பட்டார்கள்.

யாழ். மறைமாவட்ட ஆயர் இல்ல சிற்றாலயத்தில் கொவிட்-19 சுகாதார விதிமுறைகளுக்கு அமைவாக ஆயர் தலைமையில் நடைபெற்ற திருநிலைப்படுத்தல் திருச்சடங்குத் திருப்பலியில் தியாக் கோன்களான யேசுதாசன் அமிர்தராஜ், பிரான்சிஸ் மனோகரன் பிரகாஷ் நிஜந்தன், வெலிச்சோர் வொலன்ரைன் மொறிஸ் ஆகியோர் குருக்களாகத் திரு நிலைப்படுத்தப்பட்டார்கள்.

இப்புதிய அருட்பணியாளர்கள் இறை யேசுவின் வழியில் நல் மேய்ப்பர்களாகப் பணியாற்ற வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

# "முல்லையின் முத்துக்கள்" கட்டுரைத் தொகுப்பு நூல் வெளியீடு



முல்லையின் முத்துக்கள் என்ற கட்டுரைத் தொகுப்பு நூல் வெளியீட்டு நிகழ்வு முல்லைத்தீவு மறைக்கோட்ட முதல்வர் அருட்பணி A.P. அன்ரனிப்பிள்ளை அடிகள் தலைமையில் 30.08.2021 கடந்த திங்கட்கிழமை புதுக்குடியிருப்பு திருக்குடும்ப முன்பள்ளியில் நடை பெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக திருக்குடும்ப யாழ் மாகாணத் தலைவி தியோபன் குரூஸ் கலந்து கொண்டார்.

திரு மரியான் சூசைமுத்து அவர்கள் 2012 ஆம் ஆண்டு தொடக்கம் இன்று வரையிலும் பாதுகாவலன் பத்திரிகை, திருக்குடும்ப யாழ். மாகாண சகோதரிகளினால் வெளியிடப்படுகின்ற சங்கமம், உறவின் பாலங்கள் சஞ்சிகை போன்றவற்றிற்கு எழுதிய கவிதை, கட்டுரை ஆக்கங்களின் தொகுப்பே முல்லையின் முத்துக்கள் ஆகும்.

**ஆண்டவர் நகரைக் காக்கவில்லையெனில், காவலர்கள் விழித்திருப்பதும் வீணாகும். (தி.பா : 127:1)**

# எமது எண்ணம்

## ஜெனீவா கற்றுத் தரும் பாடம்

ஜெனீவா மனித உரிமைச் சபை ஆணையாளரின் வாய்மூல அறிக்கை தற்போதைய அரசாங்கத்தையே பாராட்டியுள்ளது. அத்துடன் புதிய வெளியுறவு அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் மீது நம்பிக்கையும் வெளியிடப்பட்டுள்ளது. ஆனாலும் இலங்கை அரசாங்கம் மனித உரிமைகள், மக்களின் அடிப்படை உரிமைகள் போன்ற விவகாரங்களில் கூடுதல் கவனம் செலுத்த வேண்டுமெனவும் ஆணையாளரின் அறிக்கை வலியுறுத்துகின்றது.

தங்களுக்கு நீதி கிடைக்க வேண்டுமெனப் பாதிக்கப்பட்ட மக்கள் எதிர்பார்த்திருக்கும் நிலையில், மனித உரிமைச்சபையின் செயற்பாடுகள் குறைந்தபட்ச ஆறுதலை வழங்கியுள்ளது என்ற கருத்தும் பலரிடம் காணப்படுகின்றது. போரால் பாதிக்கப்பட்ட மக்களில் அதிகமானோர் மனித உரிமைச் சபையிடம் இருந்து இன்னும் கூடுதலாக எதிர்பார்க்கின்றனர். மனித உரிமைச் சபை முன்வைக்கின்ற இலங்கை தொடர்பான தீர்மானங்கள் போரால் பாதிக்கப்பட்ட மக்களின் அடிப்படை வாழ்வாதாரப் பிரச்சினைகள் மற்றும் அவர்களின் நிம்மதியான இருப்பிடங்களை உறுதிப்படுத்தல் பாரம்பரியக் காணிகள் மீளக் கையளிக்கப்படுதல் போன்ற விடயங்களிலும் கூடுதல் கவனம் செலுத்தப்பட வேண்டுமென்ற எதிர்பார்ப்புகளும் இல்லாமலில்லை.

அதேவேளை, தமிழ்த்தேசியக் கட்சிகளினால் கடந்த மார்ச் மாதம் அனுப்பப்பட்ட தமிழ் மக்கள் சார்பான பரிந்துரைகள், முறைப்பாடுகள் எதனையுமே ஆணையாளர் கவனத்தில் எடுக்கவில்லை என்ற கவலையும் உண்டு.

இலங்கை ஒற்றையாட்சிக் கட்டமைப்பையும் (Unitary State) உள்ளக நீதி விசாரணைப் பொறி முறையையும் ஆணையாளர் நம்புகிறார். ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச நியமித்த புதிய விசாரணைக் குழுவின் அறிக்கையையும் ஆணையாளர் எதிர்பார்க்கிறார்.

அரசியல் தீர்வின் அவசியம் பற்றிக் கூறாமல் இலங்கையின் சமீபகால மனித உரிமை மீறல்கள், ஆசிரியர் சங்கத்தின் போராட்ட அடக்குமுறைகள் பற்றியே ஆணையாளர் கவலைப்படுகிறார். இந்தப் பிரச்சினைகள் பேசப்பட வேண்டும் என்பதில் மாற்றுக் கருத்தில்லை. ஆனால் ஜெனீவாத் தீர்மானத்தின் உண்மை நோக்கம், திசை திருப்பப்படுகின்றது என்றதொரு உணர்வு தமிழ் மக்களிடம் காணப்படுகின்றது.

கடந்த யூன் மாதம் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச வழங்கிய உறுதிமொழியை ஆணையாளர் அவதானக் குறிப்பாக எடுத்திருக்கிறார். அத்துடன் அந்த உறுதிமொழியின் நிறைவேற்றத்தைத் தான் எதிர்பார்ப்பதாகவும் சொற்களால் விபரிக்கிறார்.

அதாவது நிறுவன ரீதியான சீர்திருத்தங்கள் தொடர்பான பொறுப்புக் கூறல் விடயங்களில் ஐக்கிய நாடுகள் சபையோடு சேர்ந்து பொறுப்புக்கூறத் தயாராக இருப்பதாக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச உறுதியளித்திருந்தார்.

இந்த உறுதிமொழியை நம்பியே ஜனாதிபதி அர்ப்பணிப்புடன் செயற்படுகிறாரென ஆணையாளர் கூறியிருக்கிறார். 46/1 தீர்மானம் நிறைவேற்ற ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்றும் ஆணையாளர் மகிழ்ச்சியோடு விபரிக்கிறார்.

அதேவேளை, இலங்கை அரசு என்ற கட்டமைப்பும், அதன் இராஜதந்திரிகளும் மிகத் தெளிவாகச் சிந்தித்து இயங்குகிறார்கள் என்பதையும் ஆணையாளரின் இந்த அறிக்கை வெளிப்படுத்துகிறது. பேராசிரியர் பீரிஸ், மறைந்த மங்கள சமரவீர மற்றும் ரணில் விக்கிரமசிங்க போன்று சிறந்த தலைவர்களாகவும் இராஜதந்திரிகளாகவும் செயற்படக் கூடியவர்கள் ஈழத்தமிழ் மக்கள் மத்தியிலும் உருவாக வேண்டுமென்ற கருத்துத் தற்போது எழ ஆரம்பித்துள்ளது. சர்வதேச அரங்கில் ஈழத்தமிழ் மக்களின் பிரச்சினை பேசப்பட்டு நீதியான தீர்வு அமைய வேண்டுமானால் சர்வதேச அரசியலைப் புரிந்துகொண்டு செயற்படக்கூடியவர்கள் எங்கள் மத்தியில் உருவாக வேண்டும் என்பதைத்தான் ஆணையாளரின் அறிக்கையும் கோடிட்டுக் காண்பித்துள்ளதெனலாம்.

# புலோப்பளை புனித இராயப்பர் ஆலயத் திருவிழா

புலோப்பளை புனித இராயப்பர் ஆலயத் திருவிழா 24.07.2021 அன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 01.08.2021 அன்று யாழ் மறைமாவட்ட ஆயர் மேதகு ஜஸ்ரின்ஞானப்பிரகாசம்ஆண்டகைதலைமையில்கூட்டுத் திருவிழாத் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு நிறைவுற்றது.

புனித இராயப்பர் எவ்வாறு தளர்வற்ற நிலையிலும்தனது விசுவாசத்தில் நிலைத்து நின்றாரோ அதேபோல் நாமும் எங்களுக்கு ஏற்படுகின்ற பல்வேறுபட்ட வாழ்க்கைச் சூழ்நிலைகளிலும் தளர்வுறாமல் விசுவாசத்தைக் கட்டிக் காத்து, புனிதர் வழி செல்ல மன்றாடுவோமாக என ஆயர் அவர்கள் தமது மறையுரையில் தெரிவித்தார். ஆயர் அவர்களால் புனிதரின் திருச்சுரூப ஆசீர் வழங்கப்பட்டு திருவிழா இனிதே நிறைவடைந்தது.

# மறைக்கல்வி வாரம் இம்முறை பிற்போடப்பட்டுள்ளது

திருவிவிலிய மறைக்கல்வி வாரம் செப்ரெம்பர் 13ஆம் திகதி தொடக்கம் 19ஆம் திகதிவரை கடைப்பிடிக்கப்படுகின்றது. 19 ஆம் திகதி மறைக் கல்வி சிறப்பு நாளாக அனுசரிக்கப்படுகின்றது.

இம்முறை நாட்டில் நிலவிவரும் கொரோனா - 19 தொற்றுநோய் அசாதாரண சூழ்நிலை காரணமாக இவ்வாரத்தை சிறப்பிக்க முடியவில்லை என்றும் நாட்டு சூழ்நிலை சீரான பின்னர் மறைக்கல்வி வாரம் சிறப்பித்துக் கொண்டாடப் படும் என்றும் யாழ். மறை மாவட்ட மறைக்கல்வி இயக்குநர் X.W.அருட்பணி ஜேம்ஸ் அடிகள் தெரிவித்துள்ளார்.

# நாம் எத்தகைய வாழ்வை விரும்புகிறோம் என்பதை நம் கனவுகளே வெளிப்படுத்துகின்றன

## சுலோவாக்கியா இளையோருக்கு திருத்தந்தை வழங்கிய உரை

சுலோவாக்கியாவில் இளையோருக்குத் திருத்தந்தை வழங்கிய உரையாவது:

அன்பு இளையோரே, சகோதரர்களே! சகோதரிகளே! உங்களோடு உரையாட நான் வந்துள்ள இவ்வேளையில் என்னிடம் மூன்று கேள்விகளை முன் வைத்துள்ளீர்கள். உங்கள் உதவியுடன் அவைகளுக்குப் பதில் சொல்ல முனைகிறேன். இருவரிடையே நிலவும் அன்பு குறித்து Peter, மற்றும் Zuzka எழுப்பிய கேள்விக்குப் பதிலுரைக்க விரும்புகிறேன்.

அன்பு என்பது நம் வாழ்வின் மிகப்பெரும் கனவாக உள்ளது. ஆனால் அது சுலபமாகக் கிட்டுவதில்லை. நீங்களே உங்கள் கேள்வியில் கூறியதுபோல் அனைத்தையும் புதுக் கண் கொண்டு பார்க்கவேண்டும். அன்புஎன்பதுஅனுபவித்துவிட்டுத்தூக்கியெறியும்நுகர்வுக் கலாசாரத்தின் ஒரு பகுதி அல்ல. மாறாக, விசுவாசமாக இருப்பதைக் குறிக்கும் அது ஒரு கொடையாகவும், பொறுப்புணர்வாகவும் உள்ளது.

ஏதோ வந்தோம் சென்றோம் என்பதற்காக அல்ல. மாறாக, நம் வாழ்வில் ஏதாவது ஒன்றை உருவாக்குவதற்காகநாம்படைக்கப்பட்டுள்ளோம். எப்போதுமே இரு விடயங்கள் ஒன்றிணைந்து செல்வதைப்பற்றிப் படித்திருக்கிறோம், பார்த்திருக்கிறோம். அவை அன்பும், வீரத்துவ செயற்பாடுகளும். நம் வாழ்வு சிறப்புடன் விளங்கவேண்டுமானால், அன்பும் வீரத்துவமும் இன்றியமையாதவை. சிலுவையில் அறையுண்ட இயேசுவிலும் நம்மீது அவர் கொண்ட அளவுகடந்த அன்பையும் நமக்காகத் தன் உயிரையே தரத் துணிந்த உறுதியையும் காண்கிறோம். நம் அருளாளர் Anna Kolesárová அவர்களும் இதற்குச் சிறந்த எடுத்துக்காட்டாக உள்ளார். அன்பைக்குறித்துக்கனவுகாணும்போது ஒருகுடும்பத்தை உருவாக்குவது குழந்தைகளை வளர்ப்பது இன்னொருவருடன் அனைத்தையும் பகிர்வது, ஆகியவை குறித்துக் கனவு காணுங்கள். உங்கள் தவறுகள் குறைபாடுகள் குறித்து வெட்கம் வேண்டாம். உங்களை உங்களுக்காகவே ஏற்றுக்கொள்ள எப்போதும் ஒருவர் காத்திருக்கிறார். நாம் எத்தகைய வாழ்வை விரும்புகிறோம் என்பதை நம் கனவுகளே வெளிப்படுத்துகின்றன.

மிகப்பெரும் மகிழ்வுக்காக நாம் படைக்கப்பட்டிருக்கிறோம். நாம் ஒவ்வொருவரும் தனித்தன்மை வாய்ந்தவர்கள். நம் நிலையிலேயே அன்பு கூரப்படவும் பிறரை அன்புகூரவும் நாம் படைக்கப்பட்டுள்ளோம்.

நம் அன்பு கனிவழங்க வேண்டுமானால் நம் வேர்கள் மறக்கப்படாமல் இருக்க வேண்டும். நாம் உருவாகி வந்தச் சூழலை நமக்கென உருவாக்கித் தந்தவர்கள் நம் பெற்றோர். குறிப்பாக நம் தாத்தா பாட்டிகள். அந்த வேர்களை பேணிக் காக்கவேண்டும். நம் தாத்தா பாட்டியை சந்தித்து அவர்களோடு உரையாட வேண்டும் அவர்களின் அனுபவங்களுக்குச்செவிமடுக்க வேண்டும் எனத் திருத்தந்தை தனது உரையில் குறிப்பிட் டுள்ளார்.

# நத்தார் தபால் முத்திரை சித்திரப் போட்டி - 2021

வருடாந்தம் கிறிஸ்தவ மத அலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையுடன் நடாத்தப்படும் நத்தார் தபால் முத்திரைக்கான சித்திரப் போட்டிக்கான சித்திரங்கள் தற்போது படைப்பாளிகளிடமிருந்து எதிர்பார்க்கப்படுகின்றன. இரண்டு தலைப்புக்களின் கீழ் நான்கு வயதுப் பிரிவுகள் சித்திரங்களை அனுப்பி வைக்க முடியும்.

**வயது 10 வரை (10 வயதிற்குக் குறைந்தவர்கள்) 31.12.2021 தினத்தன்று)**

**10 வயதிற்கும் 15 வயதிற்கும் இடைப்பட்டவர்கள் (15 வயதிற்குக் குறைந்தவர்கள் 31.12.2021 தினத்தன்று)**

**தலைப்பு**
**விண்மீன்களின் ஒளியே கிறிஸ்துவின் பிறப்பே உலகை ஒளிர்வி!**

**15 வயதிற்கும் 21 வயதிற்கும் இடைப்பட்டவர்கள் (21 வயதிற்குக் குறைந்தவர்கள்) 31.12.2021 தினத்தன்று)**

**21 வயதினர் மற்றும் 21 வயதிற்கு மேற்பட்டவர்கள்**

**தலைப்பு**
**நோயை அழிக்க அச்சத்தைக் கலைக்க எழுந்தருளி வாரும் அமைதியின் குமாரனே!**

**சித்திரங்களை அனுப்புதல்**

A-4 தாளின் கிடைப்பக்கமாக (Landscape) சுற்றி அரை அங்குலம் இடைவெளி வைத்து வரையப்பட்ட சித்திரத்திற்கு கலர் பென்சில் தவிர்ந்த வேறு வர்ணங்களைப் பயன்படுத்தவும். அந்தப் படைப்பின் பின் புறத்தில் பெயர், வயது, முகவரி மற்றும் தொலைபேசி இலக்கம் ஆகியவற்றைக் குறிப்பிட்டுப் பங்குத் தந்தை, மறைக்கல்வி பிரதான ஆசிரியர், சமாதான நீதவான், அரச சேவையில் பதவி நிலை பதவி வகிக்கும் உத்தியோகத்தர் அவர்களின் சிபாரிசுடன் 2021.10.28 ஆம் திகதிக்கு முன்னர் திணைக்களத்தினை வந்தடையும் வகையில் அனுப்பி வைக்கவும்.

**சித்திரங்களை அனுப்ப வேண்டிய முகவரி**

பணிப்பாளர்,
கிறிஸ்தவ மத அலுவல்கள் திணைக்களம்,
இலக்கம் 16/1, ஷேடி குரோவ் அவனியூ,
கொட்டா வீதி, கொழும்பு -08.

**மேலதிக விபரங்களுக்கு: 0713635417 - 0112665584**

வெற்றி பெறும் சித்திரங்களுக்கு பணப்பரிசில்களும், சான்றிதழ்களும் வழங்கப்படும்.



# துயர் பகிர்கின்றோம்

யாழ். ஆயர் இல்லத்தில் நீண்டகாலமாகப் பணியாற்றிய **திரு வஸ்தியாம்பிள்ளை தேவதாஸ்** அவர்கள் கடந்த 12.09.2021 அன்று கிளாலியில் இறைபதமடைந்தார். அன்னாரின் இழப்பில் துயருற்றிருக்கும் குடும்பத்தினர் மற்றும் உற்றார், உறவினர்களுக்கும் எமது செபங்களுடன்கூடிய ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து நிற்பதுடன் அவரின் ஆன்மா நித்தியத்தில் இளைப்பாற இறைவனிடம் மன்றாடி நிற்கின்றோம்.

இந்தக் கட்டுரைத் தொடரைத் தொடங்க முன்
“கடவுளிடம்” ஒரு வேண்டுகோள்:

எம்மைக் குழப்பு இறைவா, எம்மைக் குழப்பு!
எம்மிலே நாமே திருப்தி கண்ட பொழுது
நாம் கண்ட கனவு நனவாயின பொழுது
ஏனெனில், நாம் கண்ட கனவு சிறிதாக இருந்த பொழுது,
நாம் பாதுகாப்பாகக் கரை ஒதுங்கிய பொழுது
ஏனெனில் நாம் கடற்கரையிலேயே படகு செலுத்திய பொழுது
எம்மைக் குழப்பு இறைவா, எம்மைக் குழப்பு

பொருளாதாரத்தில் நிறைவு கண்டு
நித்திய நீருக்கு உள்ள தாகத்தை இழந்த பொழுது,
நிரந்தரம் இல்லாததில் காதல் கொண்டு
நித்தியத்திற்குக் கனவு காணத் தவறியமைக்கு
இம்மையில் ஓர் உலகைக் கட்டியெழுப்ப முனைந்து
மறுமையை நோக்கி வாழத் தவறிய பொழுது
எம்மைக் குழப்பு, இறைவா, எம்மைக் குழப்பு

மதத்தை மக்களின் போதையாக்குவதில் இருந்து
எம்மை மனம் மாற்று இறைவா, மனம் மாற்று

முரண்பாடுகளுடன் சௌகரியமாக வாழப்
பழகிக் கொண்டமையில் இருந்து
எம்மை மனம் மாற்று இறைவா மனம் மாற்று

ஒரு நடைமுறை ஒழுங்கில் கட்டுப்பட்டு
சடங்குசட்ட மனப்பான்மையில் சிக்குண்டு
வாழும் எம்மை மனம்மாறச் செய்யும்
இறைவா, மனம் மாறச் செய்யும்

இந்தப் பூமியில் இருந்து என்னைப் பிரித்தமையிலிருந்து
அனைத்துப் படைப்புடனும் ஓர் உறவை வளர்க்க
என்னை மனம் மாறச் செய்யும் இறைவா
மனம் மாறச் செய்யும்
இம்மையில் எம்மைத் தக்கவைத்து, மதத்திலும்
இவ்வுலகிலும் ஒரு பாதுகாப்பைத் தேடியமைக்காக
என்னைக் குழப்பு இறைவா, என்னைக் குழப்பு

பாதுகாப்பும் நிச்சயமுமற்ற ஓர் எதிர்காலத்திற்கு
எம்மை மனம் மாற்றி
பரந்து கிடக்கும் சமுத்திரத்தின் பெரும்
புயலை எதிர்நோக்கவும், இப்பூமியைப்
பின்தள்ளி, வானத்தில் கண்சிமிட்டும்
நட்சத்திரங்களைத் தரிசிக்க எம்மை
மனமாற்றும் இறைவா, மனம் மாற்றும்.

பிரான்சிஸ் டிரேக் எழுதிய மூலத்திலிருந்து ஆயர் பியான்வெனிடோ ருட்ரட் அவர்களால் மொழிபெயர்த்து, எனது சில வரிகளையும் இணைத்து எழுதியுள்ளேன்.

“குழப்பு” என்று ஏன் கேட்கின்றோம்? எனெனில் நான் குழம்பினால்தான் குட்டையைக் குழப்பினால்தான் தெளிவு பிறக்கும். எனது குழப்பத்தில் இருந்து ஒரு தேடல் உருவாகும். ஆயினும், அந்தக் குழப்பம் குழப்பமாகவே நீடிக்கக்கூடாது. குழப்பம் நீடிக்குமானால் அந்தக் குழப்பம் ஒரு பதட்டத்தை உருவாக்கி, அந்தப் பதட்டம் மனநோயை வருவிக்கலாம். முரணாகக் குழப்பாமலே இருப்பின், குட்டை தேங்கி வறட்சிகண்டு, வாழ்வைப் பலவீனப்படுத்தி வளர வழிவகுக்காது. வாழ வேண்டிய, வளரவேண்டிய அகத்தே உள்ள சக்தி வற்றிவிடும். செயலிழந்து விடும்.

## வேறுபாடு

இக்கட்டுரையைத் தொடருமுன்னர் ஒரு முக்கியமான வேறுபாட்டைத் தெட்டத் தெளிவாக்க விரும்புகின்றேன். நான் இங்கு மனமாற்றத்தைப் பற்றியே எழுதுகிறேனேயொழிய மதமாற்றத்தைப் பற்றி அல்ல. இரு சொற்களுக்குமிடையே ஓர் எழுத்துத்தான் மாறியிருப்பதால், சிலர் மாறியே படிக்கலாம். அன்றேல் வேண்டுமென்றே மாற்றிப் படிக்க விரும்பலாம். எங்ஙனம் செவிமடுப்பதில் நான் கேட்க விரும்பியதையே கேட்பது போல, சிலர் ஒன்றைப் படிக்கும் பொழுது வாசிக்கும்பொழுது தாம் படிக்க விரும்புவதையே படிப்பார்கள்.

மதமாற்றத்தில் எனக்கு எந்த உடன்பாடும் இல்லை. அதைப் பற்றிப் பேசவோ, எழுதவோ எனக்கு எந்த விருப்பமும் இல்லை. நான் பேசவும் மாட்டேன். எழுதவும் மாட்டேன். இந்நேரம், 1970 களின் முற்பகுதியில் நடந்த ஒரு நிகழ்வு ஞாபகம் வருகின்றது.

# மனமாற்றம்



## ஓர் உளவளக் கண்ணோட்டம்

அன்று தீபாவளி நாள். சென்னையில் கீழ்ப்பாக்கத்தில் உள்ள ஒரு கத்தோலிக்க பங்குமனையில் தங்கி, பச்சையப்பன் கல்லூரியில் தமிழ் படித்துக் கொண்டிருந்தேன். பங்குச் சபையினருடன் கலந்துரையாடி, பங்குக் குரவரின் அனுமதியுடன் கத்தோலிக்க பங்குக் கோவிலில் தீபாவளி நாளை ஓர் ஒளி விழாவாக “கிறிஸ்து உலகின் ஒளி” என்ற தலைப்பில் கொண்டாடினோம். உபநிடதங்களிலும் நற்செய்தியிலிருந்தும் வாசகங்கள் எடுத்தியம்பப்பட்டு, அவற்றை அடிப்படையாக வைத்து எனது சிந்தனையை மக்களுடன் பகிர்ந்து கொண்டேன். எனது சிந்தனை உரையில் நான் கூறிய ஒரு வசனம் “யாரும் மதம் மாற வேண்டியதில்லை. ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் மத நெறிகளின்படி வாழ்ந்தால் சமூகத்தில் ஓர் ஒற்றுமை மலர வழியுண்டு” அது மட்டுமல்ல, “ஒருவருடைய மதத்தை மற்றவர்கள் புரிந்து ஏற்றுக்கொள்ள வாய்ப்புண்டு” என்று கூறி முடித்தேன். இதை நான் இங்கு எழுதுவதற்குக் காரணம் - இந்த மதமாற்றம் தேவையில்லை என்ற சிந்தனை என்னில் பல ஆண்டுகளுக்கு முன்னரே உறுதியாக இருந்தது.

மதம் மாறியவர்கள் எல்லாம் மனம் மாறியதில்லை. மனம் மாறியவர்கள் எல்லாம் மதத்தைத் தழுவியவர்களுமில்லை. ஆயினும், மனமாற்றம் அனைத்து மக்களுக்கும் தேவையானது: மனித ஒழுங்கிணைந்த வளர்ச்சிக்குத் தேவையானது. ஆகவே, மனமாற்றம் நிறுவனமயமாக்கப்பட்ட மதங்களை மேவியது. அதாவது, ஒருவர் தனது மதத்தினுள்ளும் மனமாற்றத்திற்கு அழைக்கப்படுகின்றார்.

மதத்தின் அடைப்படைத் தன்மையே மனித மனமாற்றந் தான். மதத்தை வாழ்வதென்று சொன்னால் அது மனமாற்றத்தில் தான் உண்டு. அதேவேளை, ஒருவர் தன்னை எந்தவொரு மதத்துடனும் அடையாளப்படுத்தாவிட்டாலும் கூட அவர் ஒரு மனமாற்றத்திற்கு அகத்தே இருந்து அழைக்கப்படுகின்றார்.

*கரைவையூர்ச் செல்வம்*

## கோவிட் - 19

கடந்த இரு வருடங்களாக உலகத்து மக்கள் அனைவரையுமே ஆட்டிப்படைக்கின்றது. இந்தக் கொரோனா. இலட்சக்கணக்கான மக்களை இதுவரை கொன்று குவித்துவிட்டது. ஆமாம், குவிந்து விட்டது. உயிரற்ற மனித சடலங்களைக் குவியலாகவே எரிக்கிறார்கள். சொந்தமும் பந்தமும் கூடிவந்து இறந்தவருக்காகச் செலுத்த வேண்டிய மரியாதையைச் செலுத்த முடியவில்லை. செபிக்க முடியவில்லை. இந்தக் கொரோனா பக்கச்சார்பின்றி செல்வந்தர்களென்றோ, வறியவர்களென்றோ பார்க்கவில்லை:
சாதி, சமயமென்று பார்க்கவில்லை:
முன்னேறிய நாடுகளென்றோ பின்தங்கிய நாடுகளென்றோ பார்க்கவில்லை:
மனித இனமென்று பார்த்துக் கொல்லுகின்றது.

உங்கள் வழிபாடு தேவையில்லை, கோவிலில் ஒன்றுகூட வேண்டாமென்று சொல்லுகின்றது. உங்கள் கொண்டாட்டங்களை நான் விரும்பவில்லை, நிறுத்துங்கள் அவற்றை என்று சொல்கின்றது. உங்கள் கல்வியால் என்ன பயன்? உங்கள் பயங்கர ஆயுதங்களால் என்ன பயன்? நான் என்ற உங்கள் மமதையை விட்டு விடுங்கள். உங்களால் எதனையும் சாதிக்கலாமென்ற திமிரை அடக்குங்கள். உங்கள் தொழில்நுட்ப முன்னேற்றத்தில் அகந்தை கொள்ளாதீர்கள். மனம் மாறுங்கள். மூன்று தசாப்த போரில் நீங்கள் இழந்த உயிர்கள் எவ்வளவு? உடமைகள் எவ்வளவு? நிலப்பரப்பு எவ்வளவு? இடப்பெயர்வுகள் எவ்வளவு? கல்வி எவ்வளவு? கலாசாரம் எவ்வளவு? இருப்பினும், இவ்வளவு இழப்புகளில் இருந்தும் எதையாவது கற்றுக் கொண்டீர்களா? இல்லை. போர் முடிந்ததும் உங்கள் பிரிவினைகளை வளர்க்கின்றீர்கள். உங்கள் அரசியல் தலைவர்களிடையே ஒற்றுமை இல்லை. போட்டியும், பொறாமையும் உங்கள் மத்தியில் மீண்டும் தலைவிரித்தாடுகின்றது. மதவெறி தலைதூக்கி விட்டது.

உங்கள் மத்தியில் வாழும் ஏழைகளை ஏனென்று கேட்டீர்களா? இந்த நீண்ட கொடிய போரினால் பாதிக்கப்பட்டவர்களை எட்டிப் பார்த்தீர்களா? இல்லை!

ஆனால், இடிந்த ஆலயங்களை மீளமைத்து, வெள்ளையடிக்கப்பட்ட கல்லறைகள் போல அந்த ஆலயங்களுக்கு வர்ணங்கள் பூசி, அவற்றை அலங்கரித்து ஆடம்பரமான வழிபாடுகளை நடத்த ஆரம்பித்து விட்டீர்களே! உங்கள் பரிசேயத்தனமான வழிபாடுகளில் கடவுள் இல்லை என்று சொல்லவே கோவில்களுக்கு வரவேண்டாமென்று சொன்னேன்.

உங்கள் பணம், பகட்டு, ஆணவம், போலி வழிபாடு, கொட்டாட்டங்கள் அனைத்தும் என் முன்னே தூசு! கொறோனாவாகிய நான் சொல்லும் செய்தி இது: கேட்பாயா? இல்லை, தொடர்ந்து கொல்லட்டுமா? இயேசு, “பேயால்” ஆட்கொள்ளப்பட்டவனை நோக்கி “ நீ யார்?” என்று கேட்டார் உனக்கு ஞாபகம் உண்டா? அதற்குப் பதிலாக பேயால் ஆட்கொள்ளப்பட்டவன் சொன்னது என்ன? “நான் பலவகைப்பட்டவன் (multiplicity). ஆமாம், என்னை அழிக்கத் தடுப்பூசிகளைக் கண்டுபிடிக்கலாம். ஆனால், நான் வேறு வேறு வடிவங்களில் தொற்றுவேன். உனக்குத் தெரியாத கிரேக்க மொழியில் நீ எனக்குப் பெயர் சூட்டலாம். அது எனக்குப் பிரச்சினை இல்லை. முன்னதைவிட நான் வேகமாகப் பரவுவேன். கொன்று குவிப்பேன். இனியாவது மனம் மாறுவாயா? உனக்கொன்று தெரியுமா? உனது நாட்டுக் கொடி, உனது இனத்தின் கொடி என்று கொடிகளிலேயே உனது வேற்றுமைகளைத் தோற்றுவித்தாயே! அற்ப மனிதா? உன்னை அறியாமலேயே இன்று நீ ஒரு கொடியின் கீழ் அடிமைப்பட்டு விட்டாய் தெரியுமா? அந்தக் கொடிக்குப் பெயர் - நீ முகத்தில் அணிந்து கொள்ளும் “முகக் கவசம்” எனது பலம் உனக்குப் புரிகின்றதா? உனது பலவீனம் உனக்குத் தெரிகின்றதா? அற்ப மனிதனே, மனந்திரும்பு. நீ உருவாக்கிய தெய்வங்களை விட்டு, உண்மையான ஒரே கடவுளைத் தேடு. உன்னுள் மறைவாகிவிட்ட கடவுளைத் தேடு. ஆன்மீகத்தில் வளர். நீ பலம் பெறுவாய். நான் பலவீனமானவேன்.
(போப் பிரான்சிஸ் அவர்களின் கோவிட் - 19 செபத்தால் ஊக்கப்பட்டு இப்பகுதியை வரைந்தேன்)

*தொடரும்...*

*கொரோனாவல்ல... கட்டுரை.*

# இறைவனின் பேரன்பு

“இறைவன் இரக்கமும் அருளும் கொண்டவர். நீடிய பொறுமையும் பேரன்பும் உள்ளவர். அவர் தமக்கு அஞ்சுவோருக்குக் காட்டும் பேரன்பு மண்ணினின்று விண்ணளவு போன்று உயர்ந்தது” (திருப்பாடல் 103:8,11).

இறைவனின் அன்பை மனித வார்த்தைகளால் முற்றுமுழுதாக விளங்கிக் கொள்ளல் கடினம். எனினும் இறைவனின் பேரன்பை அனுபவித்துக்கொண்டிருப்போர் இதனை இலகுவாகப் புரிந்துகொள்வர்.

ஒருமுறை ஒரு பேச்சாளன் மேடையில் ஏறி முழங்கினான்:

‘கடவுள் இருக்கிறார் என யாராவது வாதாட விரும்பினால் அல்லது கேள்வி கேட்க விரும்பினால் மேடைக்கு வரலாம்’ என்று சவால் விட்டான். அவ்வூரில் குடிகாரன் ஒருவன் குடிவெறியில் இருந்து குணப்பட்டு நல்ல கிறிஸ்தவனாக மாறியிருந்தான். அவன் மேடைமீது ஏறினான். ஒரு தோடம்பழத்தை எடுத்துத் தோலை உரித்து மெதுவாகச் சாப்பிட்டுக் கொண்டிருந்தான்.

‘கேள்வி கேட்காமல் தின்று கொண்டு நிற்கின்றாயே!’ என்று ஆத்திரமடைந்தான் பேச்சாளன். பழத்தைத் தின்று முடித்துவிட்டுக் கேள்வி கேட்கின்றேன்’ என்று சொல்லியவாறு அவன் சுளை சுளையாகச் சுவைத்து உண்டான். பின்னர் பேச்சாளனைப் பார்த்து பழம் நன்றாய் இருந்ததா? என்று கேட்டான்? பேச்சாளனோ, ‘பைத்தியக்காரா, பழத்தை நான் தின்று பார்க்காமல் அதன் சுவையை எப்படிச் சொல்லமுடியும்?’ என்றான். ‘கடவுள் நல்லவர் என்பதை நீ சுவைத்துப் பார்த்தால்தானே தெரியும் பின் ஏன் கடவுள் இல்லை என உளறுகிறாய்?’ என்றான். ஒரே கைதட்டல், ஒரே ஆரவாரம். நாத்திகன் நாணிப் போனான். ‘கடவுள் நல்லவர் என்பதைச் சுவைத்துப் பாருங்கள்’ (திருப்பாடல் 34,8) என்று திருப்பாடல் ஆசிரியர் சிறப்புறச் சொன்னார்.

**இறைவனின் பேரன்பின் இயல்புகளைப் பின்வருமாறு விளக்கலாம்.**

1.குணமாக்கும் இயல்பு
2.மன்னிக்கும் இயல்பு
3.நிறைவாக்கும் இயல்பு
4.மகிழ்விக்கும் இயல்பு
5.வாழ்விக்கும் இயல்பு
6.தாரைவார்க்கும் இயல்பு
7.பிறரை அன்பு செய்யும் இயல்பு
8.நிபந்தனையில்லாமல், எதிர்பார்ப்பில்லாமல் அன்பை முன்கூட்டியே வெளிப்படுத்தும் இயல்பு.

‘எப்ராயிமுக்கு நடை பயிற்றுவித்தது நானே: அவர்களைக் கையிலேந்தியதும் நானே. ஆயினும் அவர்களைக் குணமாக்கியது நானே என்பதை அவர்கள் உணராமல் போனார்கள். பரிவு என்னும் கட்டுக்களால் அவர்களைப் பிணைத்து அன்புக் கயிறுகளால் கட்டி நடத்தி வந்தேன். அவர் கள் கழுத்தில் மேல் இருந்த நுகத்தை அகற்றினேன். அவர்கள் பக்கம் சாய்ந்து உணவூட்டினேன்.

எப்பிராயிமே நான் உன்னை எப்படிக் கைவிடுவேன்? இஸ்ராயேலே, உன்னை எப்படிக் கைநெகிழ்வேன்? என் இரக்கம் பொங்கி வழிகின்றது’ (ஓசாயா 11:3,4,8).

“உனக்கு நான் முடிவில்லாத அன்பு காட்டியுள்ளேன். எனவே பேரன்பால் உன்னை ஈர்த்துள்ளேன். எப்ராயிம் என் அருமை மகன் அல்லவா? நீ என் அன்புக் குழந்தையல்லவா? உனக்கு எதிராக நான் அடிக்கடி பேசிய போதிலும் உன்னை நான் இன்னும் நினைவில் கொண்டுள்ளேன். உனக்காக என் இதயம் ஏங்கித்தவிக்கின்றது. திண்ணமாய் உனக்கு நான் இரக்கம் காட்டுவேன்” என்கிறார் ஆண்டவர் (எரேமியா 31:3,20).

இறைவன் இஸ்ராயேலரோடு நிரந்தரமான புதியதொரு உடன்படிக்கையைச் செய்து கொள்கிறார். இஸ்ராயேலர் அடிக்கடி தளம்பலுற்று இறைவனுக்கு எதிராகச் செயற்பட்டு வருவதைப் பெரிது படுத்தாமல் தாராளமான முறையில் தனது பேரன்பை வெளிப்படுத்துகின்றார். அந் நாட்களுக்குப் பிறகு இஸ்ராயேல் வீட்டாரோடு நான் செய்யவிருக்கும் உடன்படிக்கை இதுவே.

“என் சட்டத்தை அவர்கள் உள்ளத்தில் பதிப்பேன். இதை அவர்களது இதயத்தில் எழுதி வைப்பேன். நான் அவர்களின் கடவுளாய் இருப்பேன். அவர்கள் எனது மக்களாய் இருப்பார்கள்” என்கிறார் ஆண்டவர். (எரேமியா 31:33)

இந்த உண்மையை இறைவன் மீளவும் இறைவாக்கினர் எசேக்கியாவின் மூலம் உறுதிப்படுத்துகின்றார். “நான் உங்களுக்கு புதிய இதயத்தை அருளுவேன். புதிய ஆவியை உங்களுக்குள் புகுத்துவேன். உங்கள் உடலில் இருந்து கல்லான இதயத்தை எடுத்துவிட்டு சதையாலான இதயத்தைப் பொருத்துவேன். அப்பொழுது நீங்கள் என் மக்களாயிருப்பீர்கள். நான் உங்கள் கடவுளாய் இருப்பேன்” (எசேக்கியல் 36:26-28).


ஒரு தாய்க்கும் சேய்க்கும் இடையே நிலவும் இயல்பான உறவினை உருவகப்படுத்தி இறைவனின் பேரன்பின் கனிவினை, கரிசனையிளை இறைவாக்கினர் எசாயா வர்ணிக்கிறார். “பால் குடிக்கும் தன் மகவைத் தாய் மறப்பாளோ? கருத்தாங்கினவள் தன் பிள்ளைமீது இரக்கம் காட்டாதிருப்பாளோ? இவர்கள் மறந்திடினும் நான் உன்னை மறக்கவே மாட்டேன். இதோ என் உள்ளங்கையில் உன்னை நான் பொறித்துள்ளேன்” (எசாயா 49:15).

“எனக்குச் செவி கொடுங்கள்: என்னிடம் வாருங்கள்: கேளுங்கள் அப்பொழுது நீங்கள் வாழ்வடைவீர்கள். நான் உங்களுடன் என்றுமுள்ள உடன்படிக்கையைச் செய்து கொள்வேன். தாவீதுக்கு நான் காட்டிய பேரன்பை உங்களுக்கும் காட்டுவேன்” (எசாயா 55:03).

தூய அன்பின் தன்மையை இறைவனின் அன்பிலிருந்தே அறிந்து கொள்ள முடியும் என்ற உண்மையை அப்போஸ்தலரான யோவான் விளக்குகின்றார்.

“அன்பு கடவுளிடமிருந்து வருகின்றது. அன்பு செலுத்தும் அனைவரும் கடவுளிடமிருந்து பிறந்தவர்கள். அவர்கள் கடவுளை அறிந்துள்ளார்கள். நாம் கடவுள்மீது அன்பு கொண்டுள்ளோம் என்பதில் அல்ல: மாறாக அவர் நம்மீது அன்பு கொண்டு தம் மகனை நம் பாவங்களுக்குக் கழுவாயாக அனுப்பினார் என்பதில் தான் அன்பின் தன்மை விளங்குகின்றது” (1யோவான் 4:7-10).

இறைவனின் பேரன்பை அனுபவிப்போர் பிறரோடு அன்பாகப் பழகுவர். பிறரது



அருட்பணி வின்சன் பற்றிக் (அமதி)

உள்ளத்தில் அன்புச் சகோதரனாக, அன்புச் சகோதரியாக இடம் பெறுவர். கடவுளிடம் அன்பு செலுத்துவதாகச் சொல்லிக் கொண்டு தம் சகோதர சகோதரியை வெறுப்போர் பொய்யர். கண் முன்னேயுள்ள சகோதர சகோதரியிடம் அன்பு செலுத்தாதோர் கண்ணுக்குப் புலப்படாத கடவுளிடம் அன்பு செலுத்த முடியாது. கடவுளிடம் அன்பு செலுத்துவோர் தம் சகோதர சகோதரிகளிடம் அன்பு செலுத்த வேண்டும் (1யோவான் 4:20-21).

ஈற்றில், புனித பவுல் கொரிந்திய மக்களுக்கு எழுதிய முதற் திருமுகத்தில் தூய அன்பின் சிறப்பியல்பை விளக்குவதை அவதானிக்கலாம். நான் மானிடரின் மொழிகளிலும் வான தூதரின் மொழிகளிலும் பேசினாலும் அன்பு எனக்கில்லையேல் ஒலிக்கும் வெண்கலமும் ஓசையிடும் தாளமுமாவேன். இறைவாக்கு உரைக்கும் ஆற்றல் எனக்கிருப்பினும் மறைபொருள் அனைத்தையும் அறிந்தவனாய் இருப்பினும் அறிவெல்லாம் பெற்றிருப்பினும் மலைகளை இடம்பெயரச் செய்யும் அளவுக்கு நிறைந்த நம்பிக்கை கொண்டிருப்பினும் என்னிடம் அன்பில்லையேல் நான் ஒன்றுமில்லை. என் உடமையையே நான் வாரிவழங்கினும் என் உடலையே சுட்டெரிப்பதற்கென ஒப்புவித்தாலும் என்னிடம் அன்பு இல்லையேல் எனக்குப் பயன் ஒன்று மில்லை (1 கொரிந்தியர் 13:1-3).

இவ்வாறு புனித பவுல் அன்பில்லாமையின் வெறுமையினை வர்ணிக்கின்றார்.

## தமிழ்க் கிறிஸ்தவத்தின் இறை அனுபவ வளர்ச்சி

07

நான் குருவாகி ஓர் இறையியலாளராக உருவெடுத்ததன் பின்பு, பெரும் பாலும் ஆசிய நாடுகளின் அடிப்படையிலும், எங்களது சொந்தத் தமிழ் சூழலிலும், எனது இறையியல் சிந்தனைகளை உருவாக்கியிருக்கின்றேன். அவற்றை இங்கே தருகின்றேன்.

*- அருட்பணி எஸ்.ஜே.இம்மானுவேல்*

### அத்தியாயம் 3



(55-60) சீமோனும் பவுலடிகளாரும் வேதசாட்சிகளாக உரோமையில் உயிர் நீத்தனர். இன்னும் பல கிறிஸ்தவ குழுமங்கள் மறைவாக வாழ்ந்து வந்தன. (catecombs)

ஆனால் 310ஆம் ஆண்டிலிருந்து உரோமை இராட்சியப் பேரரசன் கொன்ஸ்ரன்ரைன் உதவியுடன் இணைந்து கிறிஸ்தவமும் ஒரு பேரமைப்பாக பல சிக்கல்கள் மத்தியில் வளர்ந்தது. ஆனால் உரோமைக் கிறிஸ்தவம் 4ஆம் நூற்றாண்டு தொடக்கத்தில் அரச மயமாக்கபட்டு உரோமை மன்னனால் வழி நடத்தப்பட்டது. இதைத் தொடர்ந்து உரோமை - கொன்ஸ்ரான்ரினோப்பிள் - அந்தியோக் - அலெக்ஸ்சான்றிய ஆயர்கள் மத்தியில் திருத்துவ விசுவாசம் பற்றி பல இழுபறிகள் நடந்தது.

அன்றைய உலகில் சிந்தனை முறையில் கீர்த்தி பெற்ற கிரேக்க மெய்யியல் அடிப்படையில் சீடர்கள் சிலர் தமது நம்பிக்கையைப் பகுத்தறிவின் ஆராய்ச்சிக்கு உட்படுத்தி மக்களுக்கு விளக்கத் தொடங்கினர். இதுதான் கிறிஸ்தவ இறையியலின் முதற் படியாகும்.

திருஅவைகள் உரோமைப் பீடத்தை அதிகார மையமாகக் கொள்ளத் தொடங்கிய பொழுது உரோமை இராட்சியத்தைச் சேர்ந்த நாடுகளிலே கிரேக்க மெய்யியல் ஊற்றெடுத்துக் கீர்த்தி பெற்றிருந்தது. இந்த மெய்யியலை அடித்தளமாகக் கொண்டு பல்கலைக் கழகங்களிலே பல சிந்தனை வளர்ச்சிகள் நடந்து கொண்டிருந்தன. (Plato, Socrates, Aristotle) வாக்குவாதங்கள் - நிரூபித்தல்கள் இப்படியானவைகள் நடந்த பொழுது எங்களுடைய இறையியலும் அந்த அடிப்படைச் சிந்தனைக் கோட்பாடுகளைக் கொண்டு இறையியலாக் கத்தைத் தொடங்கியது. இவ்வளர்ச்சியே கத்தோலிக்க இறையிலாக இற்றை வரை ஏற்று கொள்ளப்பட்டது. (scholastic theology)

**3.4 ஐரோப்பாவில் கிறிஸ்தவம் பேரமைப்பாக வளர்ச்சி**

3ஆம் நூற்றாண்டில் ஆரம்பமான கொன்சன்ரைன் (Constantine era) யுகத்திலே திருச்சபைக்குக் கிடைத்த சுதந்திரத்துடன் திருச்சபை இத்தாலியிலும் மற்றும் ஐரோப் பிய நாடுகளிலும் பிரான்ஸ் இங்கிலாந்து ஜேர்மனி போன்ற நாடுகளிலேயும் வளர்ந்தது. அங்கேயுள்ள பல்கலைக்கழகங்களிலேயும் இறையியல் ஒரு முக்கிய ஆய்வுகள் நிறைந்த பாடமாகக் கற்பிக்கப்பட்டது.

அந்த வளர்ச்சி உரோமையின் வழிநடத்தலிலே வளர்ந்து கொண்டு போகும் பொழுது ஐரோப்பிய நாடுகளில் வளர்ந்த திருஅவைகளில் இலத்தீன் மொழியில் வார்த்தையும் வழி பாடுகளும் இறையியலாக்கங்களும் வளர்ந்தன. இறை வார்த்தை பரவத் தொடங்கிய பொழுது அப்போஸ்தலர்கள் திருஅவைகளுக்கு எழுதிய கடிதங்கள் ஊடாக சிநதனை வளர்ச்சியும் இறையியலாக்கமும் முன்னேறியது.

இது மாத்திரமல்ல குழுமங்கள் தங்களுடைய வழிபாடுகளையும் இறைவார்த்தையையும் இயேசு விட்டுச் சென்ற நினைவு விருந்தையும் திருப்பலி விருந்தாக உருவம் கொடுத்து ஒழுங்குபடுத்தினர். ஆரம்ப நூற்றாண்டுகளில் தொடங்கப்பட்ட ஆசீர்வாதப்பர் சபை யைச் சேர்ந்த துறவிகள் இந்த முயற்சியில் மிக ஆர்வத்துடன் செயற்பட்டனர். இந்த முயற்சிகளின் பயனாகத்தான் நாங்கள் இன்று திருப்பலி விருந்துக்குப் பயன்படுத்தும் உரோமன் திருப்பலி விருந்தின் புத்தகம் (Roman missal) சங்கீதங்களடங்கிய மூன்று நேரச் செபங்கள் தோன்றின.

5ஆம் நூற்றாண்டிலேயே புனித அகுஸ்தீனார் மனம் திரும்பி அதன் பின் மிலான் ஆயராகத் தமது இறையியல் சிந்தனைகளையும் வெளியிட்டு ஐரோப்பிய திருஅவைகளை ஊக்குவித்தார்.

**3.5. 11 ஆம் நூற்றாண்டில் உரோமையிலிருந்து பிரிந்த கீழைத்தேச திருஅவைகள்**

கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் இயங்கிய திருஅவைகள் உரோமையின் அதிகார மையத்துவத்தையும் இலத்தீன் மொழியையும் ஏற்றுக் கொள்ளத் தயங்கின. கொன்ஸ்ரான்ரி நோபிள் - அலெக்ஸ்சான்றியா - அந்தியோகு போன்ற இடங்களில் இயங்கிய திருஅவைகள் உரோமைத் திருஅவையிலிருந்து பிரிந்து கீழைத்தேச பாரம்பரிய சபைகளாகத் தம்மை இனங்கண்டன. (Oriental churches) அத்துடன் அப்போஸ்தலரின் வரிசையில் தோன்றிய பிதாப் பிதாக்களை (patriarchs with apostolic succession) தலைவர்களாகக் கொண்டிருந்தனர். தமது மொழியில் இறைவார்த்தை - வழிபாடுகள் திருஅவைச் சட்டங்களையும் வாழ்க்கை முறைகளையும் ஏற்படுத்தியுள்ளனர்.

இருந்தும் 2ஆம் வத்திக்கான் சங்கத்தைத் தொடர்ந்து உரோமைப் பாப்பரசருக்கும் கீழைத்தேச திருஅவைகளை வழி நடத்தும் பிதாப் பிதாக்களுக்குமிடையில் ஒற்றுமை முயற்சிகள் தொடருகின்றன.

(தொடரும்....)

## காவலன் கலசம்

காவலன் கலசம் காவலன் கலசம் காவலன் கலசம்

அர்த்தமுள்ள ஆன்மீகம் 03

# கொரோனா முடக்கமும் நம்பிக்கை வாழ்வும்



அருட்பணி மா.றேஜிஸ் இராசநாயகம்

ஆலய வழிபாடுகள், சடங்குகள் என்று நமது கிறிஸ்தவ வாழ்வில் பரம்பரை பரம்பரையாய் ஊறித் திழைத்த நம்மேல் கொரொனா கொடிய நோய் பெரும் பேரிடியாய் பேரடியாய் வந்து விழுந்துள்ளது. நமது நம்பிக்கை வாழ்வு, காற்றில் பஞ்சாய் பறந்துவிட்டதே என்று ஏங்கித் தவிப்போர் நம்மில் எண்ணிலடங்கா. காற்றுப்போன பலூன்போல் செய்வதறியாது மூச்சுத்திணறுகின்றோம். ஆனால் இந்த முடக்கத்தினால் ஏற்பட்ட காலம் நமது நம்பிக்கை வாழ்வுபற்றி, சீடத்துவ வாழ்வுபற்றி ஆழமாக நாம் மீளாய்வு செய்ய இறைவன் நமக்குக் கொடுத்த அரிய காலம் அருளின் காலம் அருமையான காலம்.

ஆண்டவர் இயேசுதாமே தமது சீடர் என்பவர் யார்? கிறிஸ்தவர்கள் என்ற நிலையில் நமது நம்பிக்கையை எவ்வாறு வெளிப்படுத்துவது என்று தெளிவாகக் கூறியிருக்கின்றார். யோவான்15:12:13:35 சொற் றொடர்களில் "நான் உங்களிடம் அன்பு கொண்டிருப்பதுபோல நீங்களும் ஒருவர் மற்றவரிடம் அன்பு கொண்டிருக்க வேண்டும் என்பதே என் கட்டளை. நீங்கள் ஒருவர் மற்றவருக்குச் செலுத்தும் அன்பிலிருந்து நீங்கள் என் சீடர்கள் என்பதை எல்லாரும் அறிந்துகொள்வர்" என்று கூறுகிறார்.

எவ்வாறு நாம் ஒருவரையொருவர் அன்பு செய்யலாம் என்று இயேசுவே இரண்டு உவமைகள் மூலம் விளக்குகிறார். ஒன்று லூக் 10:25-37ல் வரும் நல்ல சமாரியர் உவமை. நல்ல சமாரியர் ஒரு குருவோ அன்றேல் ஒரு சமயப்பாற்றாளரோ அல்ல. அன்று வாழ்ந்த குருக்கள் சமயவாதிகளின் கண்களில் அவர் ஒரு தீட்டுப்பட்டவர். ஆனால், அவர் கடவுளுக்கு முன்னால் பிரமாணிக்கமானவர். தேவையில் வாடிய தனது அயலானை அன்பு செய்து அவருக்குப்போதிய அக்கறை காட்டியவர்.

வழிபாடுகள், சமயச் சடங்குகள் எல்லாம் நம்மைச் சமயப்பற்றாளர்களாக நம்பிக்கையாளர்களாக வாழ வழிவகுக்க வேண்டும், அருள்பாலிக்க வேண்டும். நமது நம்பிக்கை, நமது வாழ்வின் செயல்களால் நிருபிக்கப்படவேண்டும். இயேசு காட்டிய மார்க்கம் இணைபிரியாத இறையன்பும் பிறர் அன்புமே. இயேசுதாமே மத். 7:21ல் "என்னை நோக்கி ஆண்டவரே, ஆண்டவரே" எனச் சொல்பவரெல்லாம் விண்ணரசுக்குள் நுழைவதில்லை என்று கூறுகிறார். திருத்தூதர் யாக்கோப்புதனது திருமுகம் 2:14-17 சொற்றொடர்களில் "என் சகோதர சகோதரி-களே, தம்மிடம் நம்பிக்கை உண்டு எனச் சொல்லும் ஒருவர் அதைச் செயல்களிலே காட்டாவிட்டால், அதனால் பயன் என்ன? அந்த நம்பிக்கை அவரை மீட்கமுடியுமா? ஒரு சகோதரன் அல்லது ஒரு சகோதரி போதிய உடையும் அன்றாட உணவும் இல்லாதிருக்கும்போது, அவர்கள் உடலுக்குத் தேவையானவை எவற்றையும் கொடாமல் உங்களுள் ஒருவர் அவர்களைப் பார்த்து "நலமே சென்று வாருங்கள் குளிர்காய்ந்து கொள்ளுங்கள் பசியாற்றிக் கொள்ளுங்கள்" என்பாரென்றால் அதனால் பயன் என்ன? அதைப் போலவே, நம்பிக்கையும் செயல்வடிவம் பெறாவிட்டால் தன்னிலே உயிரற்றதாயிருக்கும்" என்று கூறுகின்றார்.

இரண்டாவதாக மத்.25:31-46 சொற்றொடர்களில் கிறிஸ்து கூறும் இறுதித் தீர்ப்பு. இறுதித் தீர்ப்பின்போது மனுமகன் ஆயர், அருட்தந்தையர்களோடு வரப்போவதில்லை. வந்து, அவர்: நீர் தவறாமல்
ஞாயிறு திருப்பலியில் பங்குபற்றினீர்
நீர் சிலுவைப்பாதையில்
பிரமாணிக்கமாகக் கலந்துகொண்டீர்
நீர் திருச்செபமாலையை, திருப்புகழ் மாலையை ஒழுங்காகச் சொன்னீர்
நீர் நற்கருணை ஆராதனையில் பக்தியாகப் பங்குபற்றினீர்
நீர் அந்தோனியார் திருநாளில் மகிழ்ச்சியாகக் கலந்துகொண்டீர்

என்று சொல்லப்போவதில்லை (இவற்றை நான் கூறும்போது தவறாக விளங்கி, பிழையாகக் கருத்திற்கொள்ள வேண்டாம். இவை தேவையில்லை என்று நான் சொல்லவரவில்லை. நான் கேட்பது) இவை நம்பிக்கை வாழ்வை வாழ்வதற்கு நமக்கு அருள்பாலிக்கின்றனவா? அல்லது வெற்று வார்த்தைகளாக, வெறும் சடங்குகளாக நின்று விடுகின்றனவா என்று சிந்திப்பது மிக அவசியம். எத்தனை வருடங்களாக இவற்றைக் கடைப்பிடித்துள்ளோம்? எவ்வளவுக்கு இவை நமது நம்பிக்கையை வாழ்வாக்கியுள்ளன? பழைய நற்கருணைப் பாடல் வரிகள் என் காதுகளில் ரீங்காரம் செய்கின்றன. "நிதமும் என்னில் வருகின்றீர் ஏனோ என்னில் மாற்றமில்லை?" இதனால்தான் வேதம் கூறுகிறது நாடெல்லாம் பாழாய்ப்போகிறது. ஏனென்றால் தன் இதயத்தின் ஆழத்தில் சிந்திப்பார் எவருமில்லை. இதைத்தான் கவிஞன் ஒருவன் பாடினான் "சிந்தனை செய் மனமே" என்று. கிரேக்க ஞானி சோக்கிரற்றீஸ் சொன்னார். ஏன்? எதற்கு? எப்படி? என்று கேட்டு வாழுங்கள். இவை அனைத்தையும் செய்வதற்கு ஆண்டவரால் கொடுக்கப்பட்ட அருமையான காலம் இந்த முடக்க காலம். மாறாக மனுமகன் வானதூதருடன் வந்து தனது வலப்பக்கத்தில் உள்ளவர்களைப் பார்த்து

**"நான் பசியாய் இருந்தேன், நீங்கள் உணவுகொடுத்தீர்கள்**
**தாகமாய் இருந்தேன், என் தாகத்தைத் தணித்தீர்கள் அன்னியனாய் இருந்தேன், என்னை ஏற்றுக்கொண்டீர்கள்**
**நோயுற்றிருந்தேன், என்னைக் கவனித்துக்கொண்டீர்கள்**
**சிறையிலிருந்தேன், என்னைத் தேடிவந்தீர்கள்**
**நீங்கள் மனிதத் தன்மையுடன், நேர்மையாளராய், கடின உழைப்பாளியாய், தாழ்ச்சியுள்ளவராய் இருந்தீர்கள் அதாவது நீங்கள் நம்பிக்கையாளராய், நம்பிக்கை நிறைந்தவராய் இருந்தீர்கள்.**

"எனவே, ஆசி பெற்றவர்களே! தந்தையின் இல்லத்திற்கு வாருங்கள்" என்பார். பின்பு இடப்பக்கத்தில் உள்ளோரைப் பார்த்து, "சபிக்கப்பட்டவர்களே, என்னிடமிருந்து அகன்று போங்கள். அலகைக்கும் அதன் தூதருக்கும் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிற என்றும் அணையாத நெருப்புக்குள் செல்லுங்கள். ஏனெனில், நான் பசியாய் இருந்தேன் நீங்கள் எனக்கு உணவு கொடுக்கவில்லை. தாகமாய் இருந்தேன்,

*(தொடர்ச்சி 08ம் பக்கம்)*



# யாழ்ப்பாண மறைமாவட்டம் ஒரு வரலாற்றுப் பார்வை
## பின்னணி, தோற்றம், வளர்ச்சி

**1862ம் ஆண்டு யாழ் திருத்தூது மாவட்டப் புள்ளிவிபரங்கள்(1863ம் ஆண்டு சென்னையில் வெளியிடப்பட்ட கத்தோலிக்க சமயப் புள்ளி விபரக் கோவையிலிருந்து எடுக்கப்பட்டது.) பேரருட்திரு. ஸ்ரீபன் செமேரியா, யாழ்திருத்தூது மாவட்ட ஆயர்**

| மறைத்தளம் | அருட்பணியாளர் | கத்தோலிக்கர் |
|---|---|---|
| 13) வன்னி | (வருடத்தில் ஒருமுறை தரிசிப்பு மட்டும் இடம்பெறும்) | 1,000 |

இங்கு வடபகுதியின் ஆழ உட்பகுதியில் பல சிறுசிறு கிறிஸ்தவ சமூகங்கள் பரவி வாழ்கின்றன. பரந்த இந்த வன்னி மாவட்டம் சனத்தொகைசெறிவு குறைந்த இப்பகுதி வடக்கிலிருந்து தெற்கு நோக்கி 65 மைல் வரைக்கும் கிழக்கிலிருந்து மேற்கு வரைக்கும் வியாபித்துள்ளது. தெற்கே பழம்பெரும் அரசாகவிளங்கிய அனுராதபுரம் இம்மாவட்டத்தில்தான் உள்ளது. இவ்விடம் ஒரு கிராமம் என்று சொல்ல முடியாது. பழம் பெரும் இந்நகர் இப்போது சிதைவுகளாயுள்ளதை இப்போதும் காணலாம். இம் மாவட்டத்தில் பௌத்தர்கள் தான் அதிகமாக உள்ளனர்.

1862ம் ஆண்டு யாழ் (வடக்கு) திருத்தூது மறைமாவட்டத்தைப் பொறுத்தள வில் குறிப்பாக பெண்கள் சம்பந்தமாக ஒரு முக்கியமான வருடமாகும். பிற கிறிஸ்தவ சபைகளுடன் ஒப்பிட்டுப்பார்க்கும் போது வடக்கில் பெண் கல்வி விடயத்தில் கத் தோலிக்க திருஅவை மிகவும் பின்தங்கிய நிலையிலேயேயிருந்தது. யாழ் திருத்தூது மறைமாவட்டத்தின் முதல் ஆயர் ஒறாசியோ பெற்றக்கீனி ஆண்டகை முன்னதாக கத் தோலிக்கப் பெண்பிள்ளைகளின் கல்விக்கென ஐரோப்பாவிலிருந்து ஒரு பெண்துறவியர் சபையை இங்கு கொண்டு வரவேண்டியதன் தேவையை உணர்ந்திருந்தாலும் அவரது காலத்தில் அது கைகூடாமல்போனது பற்றி முன்னர் பார்த்தோம்.

பின்னர் யாழ் திருத்தூது மறைமாவட்டத்தின் 2வது ஆயரும் அமல மரித்தியாகி கள் சபையின் முதல் ஆயருமான ஸ்ரீபன் செமேரியா ஆண்டகை காலத்தில்தான் 1862ம் ஆண்டு ஐரோப்பாவில் இருந்து முதல் பெண்கள் துறவறசபையை - போர்டோ திருக்குடும்பக்கன்னியர் சபையை யாழ்ப்பாணம் கொண்டுவருவதில் வெற்றி கண்டார். இலங்கைக்கு வந்த முதல் பெண்கள் துறவியர் சபையினரும் இவர்களே என்பது குறிப்பிடத்தக்கது.

கத்தோலிக்க திருமறை 16ம் நூற்றாண்டின் துவக்கத்தில் இலங்கையில் அறிமுகமானாலும் முதல் மூன்றரை நூற்றாண்டுகளாக கத்தோலிக்கப்பெண்துறவியர்களை இலங்கையர் கண்டதில்லை. இங்கு தொடக்கத்திலிருந்து 19ம் நூற்றாண்டின் நடுப்பகுதி வரைக்கும் வந்து பணியாற்றியவர்கள் எல்லோரும் அனேகமாக ஆண் துறவியர் சபைகளைச் சேர்ந்தவர்களே 1862ம் ஆண்டு முதன்முறையாகப் பெண்துறவியர் சபையினர் (போர்டோ திருக்குடும்பக் கன்னியர் சபையினர்) இலங்கைக்கு வருவதற்கு ஏறக்குறைய இரண்டரை நூற்றாண்டுகளுக்கு முன் இலங்கையிலிருந்து அதிலும் குறிப்பாக யாழ்ப்பாணத்திலிருந்து இரண்டு பெண்துறவியர்கள் இருந்துள்ளார்கள். ஆயினும் இவர்கள் யாழ்ப்பாணத்திலோ இலங்கையின் எப்பாகத்திலோ துறவிகளாக இருந்து பணியாற்றாது இந்தியாவின் கோவாவில் தான் பணியாற்றியிருந்தார்கள். இவர்கள் யாழ்ப்பாண அரசனாக விளங்கிய பரராசசேகரனுடைய இரண்டு புதல்வியராவர். இந்த அரசனுடைய இறப்புடன் யாழ்ப்பாண அரசு போர்த்துக்கேயரின் முழுக்கட்டுப்பாட்டுக்குள் வந்து பின்னர் அந்த அரசனுடைய இவ்விரு புதல்வியரும் (அரச குமாரிகள்) அவர்களது சகோதரனும் (அரச குமாரன்) கொழும்புக்குக் கொண்டு வரப்பட்டு அங்கிருந்த பிரான்சிஸ்கன் சபையினரது புனித அந்தோனியார் ஆலயத்தில் ஆடம்பரமாக அவர்களுக்கு 1623ம் ஆண்டு திருமுழுக்குக்கொடுக்கப்பட்டது. இந்த அரச குமாரிகளுள் ஒருவர் டோனா இசபெல், மற்றவர் டோனா மரியா ஆவார். இவ்விருவரும் இந்தியாவின் கோவாவிற்கு அனுப்பப்பட்டு அங்குள்ள புனித மொனிக்கம்மாளின் அகுஸ்த்தியன் சபையில் இணைந்து துறவிகளாயினர். அந்நாட்களில் இந்தியாவிலிருந்த ஒரேயொரு பெண்கள் துறவியர் மடம் இது மட்டும்தான். இந்த இரண்டு யாழ்ப்பாணப்பெண்துறவியருள் டோனா இசபெல் எனும் துறவி இளம் வயதிலேயே இறைவனடி சேர்ந்துவிட்டார். டோனா மரியா இவரது துறவு நிலைப்பெயர் Mary of the Visitation (மேரி ஒவ் விசிட்டேசன்) இவர் தமது துறவு நிலை வார்த்தைப்பாட்டை டிசம்பர் 17, 1637ல் எடுத்தார். பின்னர் ஜனவரி 1, 1682ல் அம்மடத்தின் 33 வது முதல்வராகப் பதவியேற்றார். பின்னர் எப்ரல் 9, 1682ல் இறைவனடி சேர்ந்தார்.

**இப்போது போர்டோ, திருக்குடும்பக் கன்னியர்சபைபற்றியசிலதகவல்கள்**

இத்துறவற சபையானது தென் கிழக்கு பிரான்சின் போர்டோ (Bordeaux) மறைமாவட்டக்குருவாகிய பியர் பியென் வெனு நொஆய் (Piere Bien Veme Noialles) என்பவரால் ஆரம்பிக்கப்பட்டது. இவர் 1793ம் ஆண்டு பிறந்து பாரிஸ் நகரில் உள்ள புனித சுல்பிஸ் (St. Sulpice) குருமடத்தில் இணைந்து பயிற்சி பெற்று 1819ம் ஆண்டு குருவாகத் திருநிலைப் படுத்தப்பட்டார். 1820ம் ஆண்டு இவரது சொந்த சகோதரி உட்பட மூன்று இளம் பெண்கள் இவரது பாதுகாவலில் ஒரு துறவு நிலை குழும வாழ்க்கையை வாழத்துவங்கினர். இதுதான் பின்னர் திருக்குடும்பக் கன்னியர் துறவற சபையின் ஆரம்பமாக இருந்தது. 1822ம் ஆண்டு போர்டோ பேராயர் இச்சபையின் விதிமுறைகளுக்கு அங்கீகாரம் வழங்கினார் (இச்சபைக்கான இறுதி அங்கீகாரம் 1903ம்ஆண்டுதிருத்தந்தை10ம்பத்திநாதரால் வழங்கப்பட்டது)

**அருட்பணி S.V.B. மங்களராஜா**

சபையின் ஆன்மீக, அறநெறி சார் பலப்படுத்தலுக்கும் ஆதரவுக்குமாக நொஆய் அடிகள், அமலமரித்தியாகிகள் அருட்பணியாளர் சபையின் அனுசரணையுடன் இயங்குவதற்காக ஏற்பாடுகளை மேற்கொண்டார். இது சம்பந்தமாக நொஆய் அடிகள் அமல மரித்தியாகிகள் சபையின் நிறுவுனர் ஆயர் புனித யூஜின் டி மசனட் ஆண்டகையை நேரில் சந்தித்துத் தேவையான ஏற்பாடுகளை மேற்கொண்டார். *(தொடரும்....)*

# காவலன் கலசம்

# என் கேள்விக்கென்ன பதில்!




*(மலர், யாழ்ப்பாணம்)*
**கே: உங்கள் நூலாகிய 'கொரோனா ஊரடங்கு : நானும் என்னூர் நாய்களும்' என்ற நூலை வாங்கிப் படித்தேன். மிக அருமையான நூல். என்னைப் பொறுத்தவரையில் எல்லோரும் கட்டாயமாகப் படிக்க வேண்டிய ஒரு நூல். ஆனால், முக்கியமான ஒரு கேள்வி! நீங்கள் நாய்கள் என்று இந்நூலில் குறிப்பிட்டது உண்மையில் எந்த நாய்களை?**
**ப :** மலர், உண்மையில் எல்லா நாய்களையும் தான்!

*(அன்ரன், யாழ்ப்பாணம்)*
**கே: இருபொருளில் பதில் சொல்வதற்கு உங்களைப் போன்ற ஓர் ஆள் உலகத்தில் இல்லை! அப்பிடிப் போட்டு முழங்குறீர்கள் ! எப்படிச் சாத்தியமாகின்றது?**
**ப :** என்ன அன்ரன்! நானாவது ஒரு சொல்லை வைத்துக்கொண்டு இரு பொருளில் பதில் சொல்கின்றேன். தமிழ் மொழி, ஒரு சொல்லுக்குப் பல பொருள் தந்து பதில் சொல்லுகின்றதே! உதாரணமாக, அகவல் என்ற சொல்லுக்கு அழைத்தல், ஆசிரியப்பா, ஆடல், ஒருசந்தம், மயிற்குரல் எனப் பல பொருள் உண்டு! இப்படி நம் மொழி இருக்கும் போது, நான் ஏன் இரு பொருளில் பதில் சொல்லக் கூடாது !

*(அமலன், யாழ்ப்பாணம்)*
**கேள்வி : கொரோனா கிருமியின் பரவல் இலங்கையைப் பொறுத்தவரையில் மிக மோசமான நிலையை அடைந்திருக்கின்றது? இனிமேல் என்ன நடக்குமோ?**
**ப :** அன்ரன், 'இனிமேல் முடக்கம் இல்லை, நேராக அடக்கம்தான் !' என்று எங்கோ படித்த வரி என் நினைவுக்கு வருகின்றது. இன்றைய நிலைமையைச் சிந்திந்துப் பார்க்க இவ்வரி ஒன்றே போதுமானது! நாம்தான் நமது உயிரைப் பாதுகாத்துக் கொள்ளும் நிலை வந்து விட்டது.

*(றமேஸ், யாழ்ப்பாணம்)*
**கே : கொரோனாவைக் கட்டுப்படுத்தப் பொது முடக்கம்... பொது முடக்கம் எனக் கத்துகின்றார்கள் ! பொது முடக்கம் தேவையா? பலன் உண்டா?**
**ப :** றமேஸ், பொது முடக்கம்' எல்லாருக்கும் கடினமான ஒன்றாகத்தான் இருக்கும்! ஆனால், பொது முடக்கத்துக்கு நாம் தயாரில்லை என்றால், பொது அடக்கத்திற்குத் தயாராக வேண்டும்! இப்போது, இவற்றில் எதனைத் தெரிவு செய்யப் போகின்றீர்கள்?

*(விஜேய், கொழும்பு)*
**கே: அண்மையில் வெளிவந்த சில நூல்களை மேய்ந்து பார்த்தேன். அவை அவ்வளவு பெரிதாக என்னைத் தொடவில்லை ! ஏன்?**
**ப :** விஜய், நீங்கள் சரியாக மேயா- மல் இருந்திருக்கலாம் அல்லது நீங்கள் மேய்ந்த மேய்ச்சல் நிலம் வாய்க்காமல் போயிருக்கலாம்! இவை இரண்டில் ஒன்று உங்களுக்கு சரிவரவில்லை என நினைக்கின்றேன். மேய்வதற்கும் ஒரு நுட்பம் இருக்கின்றது. நன்றாக மேய வேண்டும் என்றால் வாருங்கள் என்னிடம் நல்ல வயல்கள் உண்டு. பகலிரவாக மேயலாம்! அடிக் குறிப்பு: மேய்வதற்கு - வாசிப்பதற்கு, மேய்ச்சல் நிலம் - நூலகங்கள், வயல்கள் - நூல்கள். இவ்வடிக் குறிப்புப் பற்றி என்ன கருதுகின்றீர்கள் என்று அடுத்த முறை உங்கள் கருத்தைத் தெரிவிக்கலாம்!

*(நிக்சன், மன்னார்)*
**கே : கொரோனாவின் பரவலையும் தாக்கத்தையும் தடுப்பதற்கு பொது மக்கள் தங்களின் முழுமையான பங்களிப்பை வழங்குவதாகத் தெரியவில்லை! நோய்ப் பரவல் நிலை குறித்துபொதுமக்கள்பொறுப்புணர்வு உள்ளவர்களாக நடக்கின்றார்கள் எனக் கருதுகின்றீர்களா?**
**ப :** நிக்சன், சரியான ஒரு நேரத்தில் சரியான ஒரு கேள்வியைக் கேட்டிருக்கின்றீர்கள். இது குறித்து, சில நாள்களுக்கு முன்பாக நான் முகநூலில் எழுதிய விடயத்தை அப்படியே இங்கு தருவது பொருத்தமாக இருக்கும்! உங்களுடைய கேள்விக்குப் பதிலாகவும் வாசகர்கள் விழிப்புணர்வு பெற உதவியாகவும் இருக்கும். மிகவும் மனவேதனையுடன் எழுதுகின்றேன்.

சில நாட்களாகக் கோவிட் 19இன் தாக்கத்தால் பல இன்னுயிர்களை நாம் அடுத்தடுத்து இழந்து வருகின்றோம். இழப்புச் செய்திகள் தொடர்ந்த வண்ணமாக இருக்கின்றன. நமது உயிரை நாமே பாதுகாக்க வேண்டிய நிலை வந்துவிட்டது! ஆனால், இது குறித்து, நம்மில் பலர் இன்னும் விழிப்புணர்வு பெற்றவர்களாகத் தெரியவில்லை! கடந்த சில நாட்களாகச் சாவடைந்தவர்களினதும் நோயுற்றிருப்பவர்களினதும் அவர்களைச் சுற்றி வாழ்கின்றவர்களினதும் நிலைமைகளைக் கேட்டறிந்ததில் இருந்து கோவிட் 19 நோய் பற்றிய மெத்தனப் போக்கு எங்கள் பலரில் இருப்பதால் தான் தொடர்ந்து பல இழப்புக்களைச் சந்திப்பதற்குக் காரணமாக இருக்கின்றது ! இம்மெத்தனப் போக்கு நீடிப்பது இன்னும் பெரும் ஆபத்துக்களைத் தோற்றுவிக்கும்! எனவே, அநியாயமான இழப்புக்களைத் தவிர்க்க உடனடியாகச் செய்யப்படவேண்டிய சில விடயங்களைப் பார்ப்போம்:

1. தடுப்பூசியை உடனடியாகப் பெற்றுக் கொள்வோம்.
2. மூச்சுப் பயிற்சியை, ஒவ்வொரு நாளும் இரண்டு மூன்று தடவைகள் செய்வோம். தயவு செய்து இங்கு இணைத்துள்ள காணொளியைக் கட்டாயமாகப் பாருங்கள். மருத்துவ நிபுணர் பேராசிரியர் செல்லத்துரை கே. தயாபரன் அவர்கள் மூச்சுப் பயிற்சியைச் செய்வதன் ஊடாக கொரோனவுக்கு முடிவு கட்டலாம் எனத் தன் அனுபவத்தின் ஊடாகச் சொல்கின்றார். 3. எங்கு சென்றாலும் முகக்கவசம் அணிவோம். 4. ஆட்களுக்கிடையில் இடைவெளியைப் பேணுவோம். 5. அவசரமில்லாத நடமாட்டத்தை முற்றாகத் தவிர்ப்போம். 6. நமக்குக் கிடைக்கக்கூடிய சுடுதண்ணீர், குடிநீர், மல்லித்தண்ணீர், கராம்பு போன்றவைகளை எடுப்போம். 7. உடற்பயிற்சியைச் செய்வோம். 8. போதிய ஓய்வை எடுப்போம். உன்மீது நீ அன்பு கூர்வதுபோல உனக்கு அடுத்திருப்பவர் மீதும் அன்பு கூர்வாயாக." குறிப்பு: மெத்தனம் - உரிய நேரத்தில் ஒரு செயலைச் செய்யத் தவறும் நிலை ஒரு செயலில் போதிய அக்கறையும் ஈடுபாடும் காட்டாத தன்மை. நிக்சன், உங்கள் அவதானிப்புச் சரியானதே!

*(சுந்தரி, மன்னார்)*
**கே : அண்மையில் நீங்கள் சுவைத்த ஒன்றைக் கூறுவீர்களா?**
**ப :** நிறைய இருக்கின்றன சுந்தரி! ஒன்றைத் தருகின்றேன் . மணமகள் தேவை என்ற விளம்பரத்தின் புதிய பக்கம் இது ! மணமகள் தேவை - விறகடுப்பில் சமைக்கக் கூடிய, பால்மா சீனி பயன்படுத்தாது சமைக்கத் தெரிந்த , சீனிப் போசனம் உண்ணாத சிக்கனமான பெண் தேவை.
**குறிப்பு:** காலத்தின் தேவைக் கேற்ப உப்பு, மஞ்சள், மிளகு, பெருங்காயம், வெங்காயம் என நாட்டில் இல்லாதது கேட்காது இருப்பதை வைத்து சமைக்கக் கூடிய குடும்பப் பாங்கான பெண் விரும்பத்தக்கது!' நாடு போற போக்கில் மண- மகள் இப்படித்தான் விரும்பப்படுவாள் !

**அருட்பணி செ. அன்புராசா**

**கேள்விகளைக் கேளுங்கள், பதில்களைப் பாருங்கள்!**

---

# பிள்ளைகளைப் பாராட்டி ஊக்குவியுங்கள்

**பி**ள்ளைகள் வளர வளரப் பிறரது உதவி இன்றித் தாங்களாகவே பல காரியங்களைச் செய்யத் தொடங்குகின்றனர். இதனைப் பெற்றோர் அனுமதிப்பதும் ஊக்குவிப்பதும் தேவை. பிள்ளைகள் தாங்களாகவே முயலும்போது பல காரியங்களில் தடுமாறலாம், தவறுகள் செய்யலாம் அல்லது பெரியவர்களைப்போலத் திறமையாக அவற்றைச் செய்ய இயலாது போகலாம். அவ்வேளைகளில் தாங்கள் உடன- டியாகக் குறுக்கிட்டு அவற்றைச் சிறப்பாகச் செய்துகொடுத்துவிடும் சோதனை எளிதில் பல பெற்றோர்களுக்கு ஏற்படுகிறது. ஆனால் அவ்வாறு செயற்படுவது பிள்ளைகளின் உண்மையான வளர்ச்சிக்கு உதவுவது ஆகாது. தவறாகச் செய்பவற்றைச் சரியாகச் செய்வது எவ்வாறு எனப் பிள்ளைகளுக்குச் சொல்லித்தருவதும் தேவையானால் அதற்கு உதவுவதுமே பெற்றோரின் உண்மையான அன்பின் வெளிப்பாடு, தவறுகள் சில செய்து அவற்றின் வழியாகச் சரியானவற்றைத் தாங்களே கண்டறியப் பிள்ளைகளை விட்டுவிடுவதும் சில வேளைகளில் பெற்றோரின் கடமை ஆகலாம். பல்வேறு துறைகளில் பிள்ளைகளின் சொந்த முயற்சிகளைப் பெற்றோர் ஆதரிப்பது தேவை. இதற்கு இன்றியமையாதது பிள்ளைகளை அவர்கள் நிறையப் பாராட்டுவது ஆகும். நமது சமூகத்தில் பெரும்பாலான பெற்றோர் பிள்ளைகளைப் போதிய அளவு பாராட்டி ஊக்குவிப்பது இல்லை. சில பெற்றோர் தங்கள் பிள்ளைகளின் பல்வேறு திறமைகளையும் சிறப்பான சாதனைகளையும்கூடச் சிறிதும் கண்டுகொள்வது இல்லை. பலர் தங்கள் பிள்ளைகளின் பண்புகளையும் செயல்களையும் பற்றி மனத்திற்குள் நிறையப் பெருமைப்பட்டுக் கொண்டாலும் பிறரிடத்தில் பெருமையாகப் பேசினாலும் தங்கள் பிள்ளைகளிடம் அவற்றைப்பற்றி நேரடியாகவும் வெளிப்படையாகவும் தங்கள் மகிழ்ச்சியையும் பாராட்டையும் தெரிவிப்பது இல்லை. வேறு சில குடும்பங்களிலோ பெற்றோர் பிள்ளைகளிடம் எதற்கு எடுத்தாலும் குற்றம் காணுகின்றனர் அவர்களைக் குறைகூறுகின்றனர் சிறிய தவறுக- ளைக் கூடப் பெரிதுபடுத்தி வன்மையான சொற்களால் திட்டுகின்றனர். இதனால் பிள்ளைகளின் மனத்தில் தன்னம்பிக்கைக்குப் பதில் தாழ்வுமனப்பான்மையே வளருகிறது. பொதுவாகக் கூறுவது எனில், எந்த அளவுக்குப் பிள்ளைகளுக்குப் பாராட்டும் ஊக்கமும் தரப்படுகின்றதோ அந்த அளவுக்கே அவர்கள் தன்னம்பிக்கையில் வளருகின்றனர். அதனால் தங்கள் வாழ்க்கைப் பிரச்சினைகளைத் தாங்களே சமாளிக்கும் திறமையையும் அவர்கள் அதிகம் பெற்றிட முடியும். அதற்கு மாறாக, பாராட்டும் ஊக்கமும் அதிகம் பெறாமல் குறைகூறலுக்கே அதிகமாக ஆளாகி வளரும் பிள்ளைகள் அளவுக்கு மீறிய தயக்க மும் வெட்கமும் அச்சமும் உடையவர்களாகவே வளருகின்றனர். பல வகையான உணர்ச்சி அல்லது ஆளுமைக் கோளாறுகளுக்கு அவர்கள் இலக்காவது எளிது.

**நன்றி :–** இன்ப இல்லறம் உறவியல் நூல்



**முனைவர் தே.அல்போன்சு**

# அம்மாவின் வானொலிப்பெட்டி




அம்மா, தனது இயலாத முழங்காலை மடித்துத் தரையில் அமர்ந்து பின் சாஸ்டாங்கமாகத் தரையில் விழுந்து வீட்டை வணங்கியபோது வீடு அமைதியாய் அழுதது. எனக்குப் பார்ப்பதற்கு மிகுந்த சிரமமாய் இருந்தது.

அறுபது ஆண்டுகள் வாழ்ந்த வீடு. எத்தனை மனிதர்களுடன் உறவாடிய வீடு. சிறுகச்சிறுகச் சேமித்த பொருட்கள். உரிமை கொண்டாடிய பொருட்கள். சிலிர்த்து நிற்கும் பூ மரங்கள் …. எல்லாவற்றையும் விட்டு விட்டு இன்று தனியே… அனாதையாய் ….

அம்மாவால் இதைத் தாங்கிக் கொள்ள முடியாது என்பது எனக்குத் தெரியும். ஆனாலும் அம்மா எதை யும் வெளிக்காட்டிக் கொள்ளவில்லை. அவ்வப் போது வரும் உணர்வுகள் அம்மாவையும் மீறியபோது அடக்கிக்கொண்டா.

'ஓம்! அவருடைய இறப்புச்செய்தியை எங்களுக்கு அதாவது உரிமைக் காரர்களுக்குக் கட்டாயம் அறிவிப்பார்கள் ளாம்! நாங்கள் விரும்பினால் வந்து இறுதிக் கிரியைகளைச் செய்யலாமாம்!

இல்லாட்டியும் பரவாயில்லையாம்! நாங்கள் வடிவாய் செய்து முடிப்பம்!' என்று, நான் கொடுத்த பணத்திற்குப் பற்றுச்சீட்டு எழுதிக்கொண்டிருந்த முதியோர் இல்ல நிர்வாகி தனது மூக்குக் கண்ணாடிக்கு மேலால் தகவல் தந்தபோது எனது இதயம் இரண்டாவது தடவையும் பிளந்தது. எவ்வளவு வலிகளையும், வேதனைகளையும் கடந்தே வாழ்வைக் கழிக்க வேண்டியிருக்கிறது.

எல்லாம்,

எல்லாமே முடிந்துபோயிற்று. பெருமூச்சொன்று எனக்குள்ளிருந்து வெளிவந்தது. அம்மாவினுடைய முக்கிய பொருட்களை ஒவ்வொன்றாய் வாகனத்துள் ஏற்றினேன். வாகனத்தின் மறுபுறம் நின்ற மாமா விக்கிவிக்கி அழுதார். என்னைக் கண்டபோது கண்ணுக்குள் மண்விழுந்தது போலச் சமாளித்தார்.

ஐம்பது வருடங்கள் பழமையான அந்த வானொலிப் பெட்டியை கடைசியாக நான் தூக்கி வந்தபோது அது பல செய்திகளைச் சொல்லியவண்ணம் இருந்தது. இந்த வானொலிப் பெட்டிதான் அம்மாவின் கடைசி உறவு. காலை, மாலை, பகல் பொழுதுகளௌ அம்மா அந்த வானொலிப் பெட்டிக்குள்ளால் வரும் செய்திகளுக்காகக் காத்திருந்தா. அது கரகரத்த குரலில் எதேதோ எல்லாம் சொல்லி முடித்தாலும், பிரான்ஸ், கனடா, சுவிஸ் என்று வரும் செய்திகளுக்காக அம்மா ஏங்கிக்கொண்டிருந்தா. அந்த நாட்டுச்செய்திகளில் ஏதாவது ஒரு சொல்லாவது வராவிட்டால் அம்மாவுக்குச் செய்தி நிறைவடையாது.

பிரான்சில் குண்டு வெடித்த போது உடுப்பிட்டியிலிருந்த அம்மாவின் நெஞ்சு படபடத்தது. இதயம் துடிதுடித்தது. தனது பிள்ளைகள், பேரப்பிள்ளைகளை எண்ணிக் கலங்கினா. மரணச் செய்திகளையும், முதியோர் துயர்களையும் அந்த வானொலிப் பெட்டிக்கூடாக அறிந்து தன்னைச் சமாதானப்படுத்த முயன்று தோற்றுக் கொண்டிருந்தா.

என் கையிலிருந்த வானொலிப் பெட்டியை, பிள்ளைபோல நான் தூக்கி வந்தபோது அதைத் தன்னிடம் தருமாறு பார்வையால் கெஞ்சினார். கொடுத்து விட்டுக் கைத் தாங்கலாக அம்மாவைத் தூக்கினேன். அம்மா என்னை பரிதாபமாகப் பார்த்தா. 'நீயுமா என்னை முதியோர் இல்லத்துக்கு அனுப்புகிறாய்?' என்பது போல இருந்தது அந்தப்பார்வை.

முதியோர் இல்லத்தைப் பற்றி மிகவும் பக்குவமாக அம்மாவுக்கு எடுத்துச் சொல்லியிருக்கிறேன். அம்மாவால் அதை ஏற்றுக் கொள்ள முடியவில்லை . என்பதை அவரது உடல் மொழிகள் காட்டி நின்றன. ஐரோப்பிய நாட்டின் மனநிலைக்குப் பழக்கப்பட்டுப் போன எனக்கும் அம்மாவுக்குமான மன இடைவெளி அதிகமாகத் தானிருந்தது. என்னுடைய மனநிலைக்கு நெருக்கமாக அம்மாவை இழுத்தெடுப்பது சாத்தியமல்ல. அம்மாவைத்தான் நான் நெருங்க வேண்டி இருந்தது. அது அவ்வளவு சுலபமானதல்ல என்பதையும் உணர்ந்து கொண்டேன்.

பதினைந்தாயிரம் கிலோமீற்றர் தொலைவில் இருந்துகொண்டு என்னுடைய வாழ்க்கை நெருக்கடிகளுக்குள் அம்மாவையும் பராமரிப்பது உண்மையில் எனக்குப் பெரும் சுமையாகவே இருந்தது. மனைவி இதைப் புரிந்து கொண்டாலும், பிள்ளைகளுக்கு இந்தப் பாசப்போராட்டம் புரியாத புதிராக இருந்தது.

ஐரோப்பியக் கலாசார சூழலுள் முதியோர் இல்லம் என்பது மிகச் சாதாரண விடயம். நாங்கள் எங்கள் முதுமைக்காலத்தை அங்கே கழிக்க நேரலாம். அதற்குத் தயாரான மனநிலை எங்களுக்கு உருவாகி வருகிறது. யதார்த்தத்தைப் புரிந்துகொள்ள ஐரோப்பிய மனநிலை எங்களுக்குக் கற்றுத் தந்திருக்கிறது.

அம்மா புரிந்து கொள்ளாதிருப்பது எனக்குக் கவலையைத் தந்தது. சிலவேளைகளில் என்னையும் மீறி, கோபத்தையும் வரவழைத்தது. மன மாற்றம் என்பது இலகுவில் ஏற்படக்கூடிய ஒன்றல்லவே!

தவறுதான். தவறான மன நிலை தான். அதற்காக இப்போது அம்மாவைத் தண்டிக்க முடியாது. ஒரு சமூகத்தின் மனவோட்டம் அது. அதில் எல்லாப் பக்கங்களும் இருந்தன.

அம்மாவின் காலத்தில் அவை முதியோர் இல்லங்கள் என்பதை விட அனாதை இல்லங்கள் என்ற மனப்படிவுகள் இருந்தன. இந்தப் பெரிய உலகத்தில் யாருமற்ற ஒருவர்தான் அனாதையாக முடியும். அதை அவர்கள் இழிவாகப் பார்த்தார்கள். பிள்ளைகள் மற்றும் உறவுகளை, தாம் தேடிய பெரும் சொத்தாகப் பார்த்தார்கள். பெருமைப்பட்டார்கள். ஆனால், அனாதை இல்லத்தின் வாசல்கள் அந்தப் பெருமையை உடைத்து நொருக்கிச் சிதைத்தன. அவர்களால் அதைத் தாங்கிக் கொள்ள முடியவில்லை.

அம்மாவின் இன்னொரு போக்கு எனக்குச் சங்கடத்தைத் தந்தது. 'நீ விரும்பினால் என்னைக் கொண்டு போய் முதியோர் இல்லத்தில் விடு' என்று பந்தை மெதுவாக எனது காலடிக்கு உருட்டிவிட்டார். ஊர் என்ன சொல்லும் என்ற கவலையெல்லாம் எனக்குக் கிடையாது. அம்மாவின் மனம் ஒப்பாமல் இந்தக்காரியத்தைச் செய்யக்கூடாது என்ற பெருவிருப்பு மட்டுமே எனக்குள் கிடந்து உழன்று கொண்டிருந்தது. முதல் நாள் இரவு சாமிப்படத்திற்கு முன்னால் நின்று நீண்ட நேரம் நெஞ்சுருகி அழுத காட்சி என்னை வதைத்தெடுத்தது.

அம்மா, வீட்டைவிட்டு முதியோர் இல்லத்திற்குப் பயணிப்பது, இறுதிப் பயணம் போலவே எனக்குள் காட்சிகள் விரிந்தன ….. இறந்த பின்னரான பயணம் வேறு. உயிருடன் பாடையிலேற்றும் கொடுமை வேறு. இது தான் கடைசியாக அம்மாவைப் பார்க்கும் தருணம். இனி எந்த முகத்துடன் உறவு என்று நான் முதியோர் இல்லத்தில் போய் அம்மாவைப் பார்ப்பது? அல்லது வேறு யாருக்குத்தான் அப்படி ஒரு நெஞ்சுரம் வரும்? அது என்னால் முடியாது என்பது எனக்குத் தெரிந்தது. மனதுள் ஏதோ பாரமாய் இறங்கியது. மனது கனத்துக்கொண்டே இருந்தது. அம்மாவின் பயணம் தொடர்ந்தது.

*மனோ சின்னத்துரை*

*நன்றி: கொரோனா வீட்டுக்கதை*

# யாழ். அடைக்கல அன்னை ஆலய பங்குவிழாவும் 400 ஆவது ஆண்டு யூபிலிப் பிரகடனமும்





யாழ். புனித அடைக்கல அன்னை பங்குத் திருஅவையில் தூய கன்னிமரியாவின் பிறப்புப் பெருவிழா கடந்த 08.09.2021 புதன்கிழமை அன்றுயாழ். மறைமாவட்ட ஆயர் பேரருட்திரு ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை தலைமையில் வெகு சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. இவ்வாண்டு பங்குத் திருஅவையின் பெருவிழா முன்னர் எப்போதும் இடம்பெற்றிராத முறையில் கோவிட்-19 பெருந் தொற்றுக் காரணமாக அனைத்துத் திருவழிபாடுகளும் பத்து நாட்களாக Holy Mary தொலைக் காட்சியில் நேரலையாக ஒளிபரப்பப்பட்டது. பங்குமக்களும், ஏனையவர்களும் ஆலயம் வராமல் தங்கள் இல்லங்களிலிருந்தவாறு இத் திருவழிபாடுகளில் சுகாதார நடைமுறைகளைக் கையாண்டு பங்கு பற்றினார்கள்.

முன்னதாக ஓகஸ்ட் 30ம் நாள் மாலை 5.00 மணிக்கு இடம்பெற்ற திருச் செபமாலையைத் தொடர்ந்து முதலில் எட்டு வலயங்களின் எட்டுக் கொடிகளும் ஏற்றப்பட்டது. தொடர்ந்து பங்குத் தந்தையால் பங்கின் பிரதான புனித அடைக்கல அன்னையின் கொடி ஒரே கம்பத்தில் ஏற்றப்பட்டது.

தினமும் மாலை 5.00 மணிக்கு செபமாலையுடன் திருப்பலியும், மறையுரையும் அன்றைய நாள் நவநாள் வழிபாடுகளும் இடம்பெற்றன. ஒன்பது ஆயத்த நாட்களிலும் அருட்பணி A.சுறோப் அமதி அடிகளாரின் இறையியல் சிந்தனையிலான கருத்தாழம்மிக்க மறையுரைகள் இடம்பெற்றது. நான்காம் நாள் **“கிறிஸ்தவ குடும்பங்கள் கிறிஸ்து விரும்பும் குடும்பங்களா?”** என்னும் தலைப்பில் அருட்பணி A.சுறோப் அமதி அடிகளாருடன் அருட்பணி யூட் ஜெனீஸ் அமதி அடிகளாரும் இணைந்து ஆற்றிய உரையாடல் மூலமான மறையுரை மக்கள் உள்ளங்களைத் தொட்ட விடயமாகக் காணப்பட்டது. மேலும் ஒன்பதாம் நாள் நற்கருணை வழிபாடுகள் பெரும் பக்திச் சிறப்புடன் அருட்பணி P.J.ஜெபரட்ணம் அடிகளாரின் தலைமையில் மேலும் சில அருட்பணியாளர்கள் இணைந்து நடாத்தினார்கள். தொடக்கம் முதல் இறுதி மட்டும் அனைத்துத்திருவழிபாடுகளையும்வலயப் பிரதிநிதிகளும், திரு வழிபாட்டுக் குழுப்பிரதிநிதிகளும், பாடகர் குழாமுடன் இணைந்து மிகவும் பக்திச் சிறப்புடன் நடாத்தினார்கள்.

இறுதியாக செப்ரெம்பர் எட்டாம் நாள் புதன்கிழமை புனித அடைக்கல அன்னையின் பிறப்புப் பெருவிழாத் திருப் பலி காலை 6.00 மணிக்கு செபமாலையுடன் ஆரம்பமாகி தொடர்ந்து யாழ். மறைமாவட்ட ஆயர் தலைமையில், அருட்பணியாளர்கள் சிலரும் இணைந்து திருநாள் திருப்பலியை கூட்டுத் திருப் பலியாக ஒப்புக் கொடுத்தார்கள். நிறைவில் புனித அடைக்கல அன்னையின் திருச்சொரூப ஆசீரைத் தொடர்ந்து ஆயர்அவர்கள்1622ம்ஆண்டு செப்ரெம்பர் 8ம் நாள் யாழ்ப்பாண இராட்சியம் புனித கன்னிமரியாளுக்கு போர்த்துக்கேய அரசாலும், திருச்சபையாலும் நேர்ந்தளிக்கப்பட்டு ஆண்டு தோறும் யாழ். குடாநாட்டின் மையத்தில் கோவில் கொண்டு எழுந்தருளி இருக்கும் புனித அடைக்கல மாதா ஆலயத் திருஅவையில் கொண்டாடப்பட்டு வந்ததன் 400வது மாபெரும் யூபிலி ஆண்டை அதிகார பூர்வமாகப் பிரகடனம் செய்தது.

பங்கு மக்களும் மற்றும் அனைத்து இறைமக்களும் இணைந்து தேவையான ஆன்மீக ஆயத்தங்களுடன் எதிர்வரும் 2022ம் ஆண்டு செப்ரெம்பர் 8ம் நாள் மாபெரும் யூபிலி விழாவாகக் கொண்டாட அழைப்பு விடுத்தார். யூபிலி ஆண்டைக் குறிக்கும் முகமாக ஆலய முன்றலில் யூபிலிக் கொடி ஆசீர்வதித்து ஏற்றப்பட்டது. இத் திருநாட்களின் அனைத்து விடயங்களும் பங்குத்தந்தை அருட்பணி J.B.அன்ரனி அவர்களின் தலைமையில் இடம்பெற்றது இங்கு குறிப்பிடத்தக்கது.

# உடன் பிறப்புக்களும் உலகம் உணராத உண்மைகளும்

**தம்பி என்ற சொந்தமும் அண்ணன் என்ற பந்தமும் இறைவன் அளித்த வரம் தானே! ஒரு குடும்பத்தில் அக்கா என்பவள் தன் இளையவர்களுக்கு இன்னொரு அம்மா போன்றவள் அல்லவா? ஏன் அன்றிலிருந்து இன்றுவரை இந்த உண்மையை உலகம் புரிந்து கொள்ள மறுக்கின்றது?**

தம்பி என்ற சொந்தமும் அண்ணன் என்ற பந்தமும் கூட இறைவன் அளித்த வரம் தானே! ஒரு குடும்பத்தில் அக்கா என்பவள் தன் இளையவர்களுக்கு இன்னொரு அம்மா போன்றவள் அல்லவா? ஏன் அன்றிலிருந்து இன்றுவரை இந்த உண்மையை உலகம் புரிந்து கொள்ள மறுக்கின்றது? தன் தம்பியை கொன்றதுமல்லாது “நான் என்ன என் சகோதரனுக்குக் காவலாளியா?” எனக் கேட்டவன் தானே ஆபேலின் அண்ணன் காயின் (தொ.நூ 4:9). ஏசாவின் தலைமகன் உரிமையைத் தட்டிப் பறித்தவன் தானே அவன் தம்பி யாக்கோப்பு (தொ.நூ 26:27-34) தம் தம்பியையே கொலை செய்யத் திட்டம் தீட்டும் அளவிற்கு அவன் மேல் பொறாமை கொண்டவர்கள் தானே யோசேப்பின் சகோதரர்கள்! (தொ.நூ 37:1-18) இவர்கள் தொடக்கநூல் காட்டுகின்ற உடன்பிறப்பின் மகிமையைப் புரிந்து கொள்ள முடியாத பாத்திரங்கள்.

இம்மூன்று உடன்பிறப்புகளுக்கும் மாறுபட்ட உடன்பிறப்பு குழுமம் ஒன்றை வேதாகமத்தில் கண்டபோது மகிழ்ச்சியடைந்தேன். இக்குழுமத்தின் மூத்த உறுப்பினர் பெயர் ஆரோன், அவரது தங்கை மிரியாம் (வி.ப 15:20) இவர்களுக்கு இளையவராய்ப் பிறந்தவர் தாம் மோசே! இவர் பிறந்த போது தான் பார்வோன் மன்னன் பிறக்கும் எபிரேய ஆண்மகவு அனைத்தையும் நைல் நதியில் எறிந்து விட வேண்டும் எனும் ஆணையைப் பிறப்பித்திருக்க வேண்டும் (வி.ப 12:22). ஆனால் இக் குழந்தையின் அழகைக் கண்டு எப்படியாவது பாதுகாத்து விட வேண்டும் என்று மூன்று மாதம் வரை அவனை மறைத்து வைத்திருந்தாள் அவன் தாய். அதன் பிறகும் அவனை மறைக்க இயலாத நிலை. நைல் நதியில் வீசி எறிந்து கொல்லவும் மனமில்லை. ஆகவே அவன் தாய் ஒரு திட்டம் தீட்டுகிறாள். அவனுக்காக கோரைப் புல்லால் பேழை ஒன்று செய்கின்றாள். அதன்மீது நீலக்கீல், கீல் என்பவற்றைப் பூசி குழந்தையை அதனுள் வைத்து நைல் நதிக்கரையிலுள்ள நாணல்களுக்கிடையில் விட்டு வைத்தாள். மேலும் அக்குழந்தைக்கு என்ன ஆகுமோ என்பதை அறிந்துகொள்ளத் தூரத்தில் நின்று பார்த்துக் கொள்ளும் பொறுப்பைக் குழந்தையின் சகோதரிக்குக் கொடுத்திருந்தாள் தாய்!(வி.ப 2:4)

எனவே, தனது தம்பியின் குழந்தைப் பருவத்திலேயே அவனைக் கண்காணிக்கும் பொறுப்பை பெற்றிருந்தாள் மிரியாம். இப்பொறுப்பைச் செவ்வனே ஆற்றிய புத்திசாலிப் பெண்ணாகவும் விளங்கினாள் அவள். நைல் நதியில் நீராட வந்த மன்னனின் மகள் இப்பேழையைப் பார்த்து அழுது கொண்டிருந்த குழந்தையின் மேல் மனமிரங்கி, “இது ஒரு எபிரேய குழந்தையாயிற்றே, இத்துணை அழகு வாய்ந்தவனாய்த் திகழ்கின்றானே” என வியந்து கொண்டிருக்கும் அந்த சரியான நேரத்தில் அரசிளங்குமாரியிடம் ஓடிச்செல்கின்றாள் மிரியாம். “பாலூட்டி இப்பிள்ளையை வளர்க்க எபிரேயச் செவிலி ஒருத்தியை நான் அழைத்து வரட்டுமா?” (வி.ப 2:7)எனத் தலையீடு செய்கின்றாள். அந்த அளவுக்கு அவள் துரிதமாய் செயற்பட்டாள் எனின் அவள் மூளை எத்துணை விரைவாய்ச் செயற்பட்டிருக்க வேண்டும்? எத்துணை அன்பு தன் தம்பியின் மீது அவள் கொண்டிருந்திருக்க வேண்டும்? மன்னனின் மகளும் அதற்கு இணங்குகின்றாள். எனவே தம் தாயை தம் தம்பிக்கு செவிலித் தாயாக ஆக்கிப் பாலூட்டி வளர்ப்பதற்கும் அதற்காகக் கூலியும் பெற்று மகிழ்வதற்கும் வாய்ப்பைத் தேடித் தந்தது இந்த அக்காளின் பெருமையன்றோ! (வி.ப 2:8-10) அது மட்டுமல்ல விடுதலை பெற்றுச் செங்கடலைக் கடந்த பின்பு மகளிர் பிரிவுக்குத் தலைமைப் பொறுப்பேற்று அதைத் திறமையோடு வழிநடத்தும் தலைவியாய் விளங்கியவளும் இந்த மிரியாம் தாமே! இவளிடம் இறைவாக்குரைக்கும் சிறப்புத் திறனும் இருந்தது தானே! ஏன் இசை ஞானியாகவும் இவள் செயற்பட்டாள் அல்லவா? ஆகவேதான் மோசே ஆண்டவரைப் புகழ்ந்தேத்தி



வெற்றிப்பாடலைப் பாடியபோது மிரியாம் தகுந்ததோர் பல்லவியை புனைந்து பாடியது மட்டுமன்றி பிற மகளிரையும் ஆடிப்பாடி இறைத் துதியைக் கூறவைத்தாள் என்று விடுதலைப் பயண நூல் கூறுகின்றது.

மோசேயை அழைக்கின்ற போதே கடவுள் ஆரோனின் நாவன்மையைப் புகழ்ந்து கூறி அவரின் தோழமை யோடு மோசேயைத் தலைமைப் பொறுப்பேற்கும் படி கடவுள் அறிவுறுத்துகின்றார். “லேவியனான ஆரோன் உனக்குச் சகோதரன் அல்லவா? அவன் நாவன்மை உடையவன் என்று எனக்கு தெரியும். உனக்குப் பதிலாக அவன் மக்களிடம் பேசுவதால் அவன் உனக்கு வாயாக இருப்பான். நீயோ அவனுக்குக் கடவுள் போல இருப்பாய்”(வி.ப 4:15-16) என்றார். ஆக ஆரோன் தம் தம்பியுடன் கூட்டுத் தலைமை பெற்றுச் செயற்பட்டார் என்பதை நம்மால் அறிய முடிகிறது. எனவேதான் இந்த உடன்பிறப்புகளை ஒப்பற்ற உடன் பிறப்புக்கள் என்று கூற முனைந்தேன்.

ஆயினும் மனித வலுக்குறைவாலோ என்னவோ இத்தகு ஒப்பற்ற உடன்பிறப்புகள் மத்தியிலும் ஓர் உட்பூசல் உருவாகியது என்பது என் மனதில் சோகத்தை ஏற்படுத்திய ஒரு வரலாற்று உண்மை. இந்த விரிசலுக்குக் காரணமாக அமைந்தது மோசேயின் மனைவி ஓர் எத்தியோப்பியப் பெண் என்பதாக மிரியாமும் ஆரோனும் பேசிக்கொண்டது தான் எனச் சொல்லப்படுகிறது. (எண் 12:1) ஆனால் உண்மையான காரணம் இது வல்ல. எத்தியோப்பிய பெண் என்றாலே அவள் கறுப்பு நிறத்தை உடையவள் என்பது எல்லோரும் அறிந்த உண்மை. இது இயற்கையை ஒத்தது. ஒருவரின் நிறத்திற்கு அவர் பொறுப்பல்ல. அதே நேரம் கறுப்பு என்றதும் வெறுப்புக் கொள்ள வேண்டிய அவசியமும் இல்லை. ஏனெனில் தம் நிறத்தில் கறுப்பானவர்கள் எல்லோரும் அழகில் குறைந்தவர்களும் அல்ல. தம் நிறத்தில் வெள்ளை ஆனவர்கள் எல்லோரும் தம் மனதளவில் வெண்மையானவர்கள் என்பதும் பொருளல்ல. நிறமா முக்கியம்? மனம் தானே முக்கியம். பணமா முக்கியம்? குணம் தானே முக்கியம். அவ்வாறிருக்க மிரியாமும் ஆரோனும் மூத்தவர்கள் என்பதற்காக மோசேக்கு எதிராகப் பேச வேண்டிய அவசியமும் இல்லை. அவர்களின் எதிர்ப்புக்கு உண்மையான காரணம் அவர்களின் அடித்தளத்து மனதிலே ஏற்பட்ட தற்பெருமை. “ஆண்டவர் உண்மையில் மோசே வழியாக மட்டுமா பேசியுள்ளார்? அவர் எங்கள் வழியாகவும் பேசவில்லையா?” என்று அவர்கள் அவரோடு ஒப்பிட்டுப் பேசியது தான் அவர்களின் எதிர்ப்புரைக்கான உண்மைக் காரணம். பொறாமையும் தற்பெருமையுமே காரணம். ஆனால் இவர்கள் தம்மைக் கடுமையாக விமர்சனம் செய்த வேளையிலே “மோசே பூவுலகின் அனைத்து மாந்தரிலும் சாந்தமிகு மானிடராய்த் திகழ்ந்தார்” (எண் 12:3) என்று கூறுகின்றது வேதம். எனவே அவர் இவர்களின் விமர்சனத்திற்கு எந்தவிதப் பதிலையும் தரவில்லை. அத்தகு விமர்சனத்துக்கு அவர் உரியவரும் அல்ல. அதன் காரணமாகவே கடவுள் அவர்களுக்கு பதில் கொடுக்கும் பொறுப்பை ஏற்றுக் கொள்கின்றார். அவரே தாம் அழைத்த மோசேக்கு ஆதரவாகக் குரல் கொடுக்க முன்வருகிறார்.

அவர்கள் மூவரையும் சந்திப்பு கூடாரத்துக்கு வரும்படி அறிவிக்கின்றார். வந்ததும் கூடார வாயிலருகே இறைவன் இறங்கி வந்து ஆரோனையும் மிரியாமையும் அழைத்து முன்வருமாறு கூறுகின்றார். அவ்விருவரும் முன் வந்து நிற்கின்றனர்.என் வார்த்தையைக் கேளுங்கள் எனச் சினம் கொண்டு இரு கருத்துக்களை முன்வைக்கின்றார் இறைவன். முதற்கண், வேறு யாரைக் காட்டிலும் மோசேயை “நம்பிக்கைக்குரியவன்” என்பதை தெளிவாக வரையறுத்துக் கூறுகின்றார். அடுத்து எந்த இறைவாக்கினருக்கும் கிடைக்காத ஒரு தனிச் சிறப்பை மோசேக்கு மட்டும் தாம் தந்திருப்பதாகவும் தெரிவிக்கின்றார். அதாவது ஏனைய இறைவாக்கினரிடம் காட்சியின் வாயிலாகவோ, கனவின் மூலமாகவோ பேசியுள்ளேன். ஆனால் மோசேயோடு மட்டுமே முகத்துக்கு முகம் பேசியுள்ளேன். எனது உருவையே அவன் காண்கின்றான். இத்தகு தனிச்சிறப்பு வாய்ந்த அடியானுக்கு எதிராக பேசுவதற்கு நீங்கள் அஞ்ச வேண்டாமா? (எண் 2:6-8) என கடுமையாக தம் சினத்தை காட்டுகின்றார். இறைவன் தம் சினத்தை வார்த்தையில் மட்டுமின்றி செயல் வடிவி லும் காட்டி விட்டு மறைந்து விடுகிறார். மிரியாம் தொழுநோயால் பீடிக்கப்படுகிறாள். அதை கண்ட ஆரோன் அஞ்சி நடுங்கி “அறிவீனமாகச் செய்த எங்கள் பாவத்தை எங்கள் மேல் சுமத்த வேண்டாம்” என்று மன்றாடுகிறார். அதனால் தான் என்னவோ அந்நோய் அவரை பீடிக்காமல் விட்டு அகன்றது. அதற்காக ஆரோன் மட்டும் இறைத்தண்டனையிலிருந்து தப்பித்து விட்டார் என எண்ணத் தேவையில்லை.

இந்நாள்வரை மோசேயோடு இணையாகப் பணியாற்றி தலைமைப் பொறுப்பேற்று மக்களை வாக்களிக்கப்பட்ட நாட்டிற்கு அழைத்துச் செல்லும் பேற்றைப் பெற்றிருந்தும் அந்நாட்டுக்குள் நுழையும் பேற்றை பெறாமலேயே எல்லையிலேயே இறக்கும்படி செய்து விடுகிறார் இறைவன். ஆரோனின் உடைகளை உரிந்து அவன் தன் மகன் எலயாசருக்கு உடுத்த வைத்ததும் “ஓர்” எனும் மலை உச்சியில் இறக்கின்றார் ஆரோன். (எண் 20:22-29)

உடன்பிறப்புக்கள் ஒப்பற்ற முறையில் ஒருங்கிணைந்து இறைபணியாற்றினும் இறுதிவரை ஒருவர் ஒருவரைப் புரிந்து, இறையழைப்பை மதித்து, அவரவர் தகுதியை உணர்ந்து வாழ்ந்தால் ஒழிய இறுதிவரை இறையாசீரைப் பெற முடியாது என்பது தெளிவு. இறைவன் அனைவருக்கும் உடன்பிறப்புகளைக் கொடுத்து ஆசீர்வதிப்பது கிடையாது. உள்ளவர்கள் அருமை உணர மறுக்கின்றார்கள். அருமை உணர்ந்தவர்கள் உடன்பிறப்பொன்று இல்லாது தவிக்கின்றார்கள். •

அருட்சகோ.வி.ஜெ.ஜேசுதாஸ்

## கொரோனா முடக்கமும்...

(05ம் பக்கத் தொடர்ச்சி)

என் தாகத்தைத் தணிக்கவில்லை நான் அன்னியாய் இருந்தேன், நீங்கள் என்னை ஏற்றுக்கொள்ளவில்லை.நோயுற்றிருந்தேன், சிறையிலிருந்தேன், என்னைக் கவனித்துக்கொள்ளவில்லை” என்பார்.

எனவே, இந்த கொரோனா முடக்கத்தின்போது நமது நம்பிக்கை வாழ்வின் முக்கியத்துவங்கள், சீடத்துவத்தின் முன்னுரிமைகள் எவை என்ற வினாவைக் கேட்டு, நமது நம்பிக்கை வாழ்வை இதயசுத்தி யோடு மீளாய்வு செய்வோமா? மீளாய்வு செய்து, இறுதித் தீர்ப்பின்போது நாம் எப்பக்கம் நிற்கப்போகிறோம் என்பதை முடிவு செய்வோம். இறைவன் நமது அகக் கண்களைத் திறந்து, நம்மை உறுதிப்படுத்தி மனித நேயத்துடன் பிறர் அன்புடன் வாழச் செய்வாராக!

# சமாதானத்துக்கான பணியினை கலை வழியாக முன்னெடுத்த திருமறைக் கலாமன்றம்

வடக்குக் கிழக்கு ஆயர் மன்றமானது உருவாக்கப்பட்டதன் பின்னர் சமாதானத்துக்கான மையம் ஒன்றினை உருவாக்கு வதற்கான உரையாடல்கள் நடைபெறுகின்ற இக்காலத்தில், சமாதானத்துக்கான பல முயற்சிகளைத் தொண்ணூறுகளில் இருந்தே திருமறைக் கலாமன்றம் மேற்கொண்டு வந்திருக்கின்றது என்ற வகையில் மேற்படி செயற்பாட்டுக்கு உதவும் என்ற வகையில் அது தொடர்பான ஒரு அறிமுகத்தை வழங்கும் நோக்குடன் இக்கட்டுரை வரையப்படுகின்றது

எமது மண்ணில் கடந்த மூன்று தசாப்த காலங்களுக்கு மேல் நடைபெற்ற கொடிய யுத்தம் பாரிய உயிரழிவுகளையும் பொருள் அழிவுகளையும் ஏற்படுத்திய அதே வேளை இனங்களுக்கிடையேயான விரிசலையும் அதிகப்படுத்தி இருந்தது. இத்தகைய சூழலில் 'அமைதியை ஏற்படுத்துபவர் பேறுபெற்றோர்' என்ற இறை வார்த்தைக்கு அமைவாகத் திருமறைக் கலாமன்றத்தின் ஸ்தாபகரும் இயக்குநருமான அருட்கலாநிதி நீ.மரியசேவியர் அடிகள் 1990ஆம் ஆண்டிலிருந்து இன ஒடுக்கு முறைக்கு எதிராகவும், யுத்தத்திற்கெதிராகவும், சமாதானத்தை முதன்மைப்படுத்தியும், பல்வேறு செயற்பாடுகளை மேற்கொள்ளத் தொடங்கினார். இணக்கப்பாட்டுக்கான முதல் முயற்சிகளாகவும் அவை இருந்தன. அவற்றினை அவர் கலைவழியாக மேற்கொள்ளத் தொடங்கினார்.

### திருமறைக் கலாமன்றம்

1965 ஆம் ஆண்டு திருமறைக் கலாமன்றம் என்ற நிறுவனத்தினை உருவாக்கிய அருட்கலாநிதி மரியசேவியர் அடிகள் கலையைஒருஊடகமாகக்கொண்டு பல்வேறு மறைபொருள் நாடகங்களையும், திருப்பாடுகளின் நாடகங்களையும் தயாரித்து அவற்றுக்கூடாக பல்வேறு சமூக மேம்பாட்டுப் பணிகளை ஆற்றிவந்தார். கத்தோலிக்க கலை மையமாக இயங்கிய திருமறைக் கலாமன்றத்தினை மரிய சேவியர் அடிகள் 1988ஆம் ஆண்டிலிருந்து ஒரு கலாசார மையமாக மாற்றி இனம் மதம் மொழி கடந்த நிறுவனமாக மீளுருவாக்கம் செய்து Centre For Performingarts என்றபெயருடன், பல்வேறு



பணிகளையும் அதற்கூடாக மேற்கொள்ளத் தொடங்கினார். அவ்வாறு மேற்கொண்ட செயற்பாடுகளில் சமாதானத்துக்கான கலை முயற்சிகள் மிகவும் முக்கியமான இடத்தினைப் பெற்றன.

### சமாதானச் சிந்தனை

தொண்ணூறுகளில் யாழ்ப்பாணம் முற்றுகையிடப்பட்ட பிரதேசமாகவும் குடாநாட்டுக்கு வெளியே இங்கு நடைபெற்ற யுத்த அவலங்களை யாரும் பேசாத ஊடக சுதந்திரமில்லாத சூழ்நிலை இருந்தது. மரியசேவியர் அடிகளே முதன்முதலாக கலைவழியாக இதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளத் தொடங்கினார். சமாதானம் பற்றி அவர் கொண்டிருந்த கருத்து நிலை அச்செயற்பாடுகளுக்குக் காரணமாக அமைந்தது. இது பற்றி அவர் 'காலம்' சஞ்சிகைக்கு வழங்கிய நேர்காணல் ஒன்றிலே பின்வருமாறு குறிப்பிடுகின்றார். "சமாதானத்துக்காக வேலைசெய்வது எனது கடமை என்ற உணர்வு எனக்கு எப்போதும் இருந்தது. கலை என்ற தளத்தில் எல்லா மனிதர்களையும் சந்திக்கச் செய்ய முடியும் என்று நம்பினேன். ஏனென்றால் அரசியல், சமயம் இவையெல்லாம் எல்லா மனிதர்களையும் ஒன்றிணைக்காது. அதனால்தான் கலை என்ற தளத்தினை நான் தெரிந்தெடுத்தேன். மற்றது எதிரியாக ஒருவனை நாம் பார்க்கத் தொடங்கும் போதே நான் அவனுடைய பிரச்சினையை விளங்க முடியாதவனாக மாறிவிடுகிறேன். முற்சார்புகள் எம்மை அவனைப் புரிந்து கொள்வதற்குத் தடுத்து விடுகின்றன. மாறாக நண்பனாகக் கொண்டால், நல்ல உறவினைப் பேணினால் அவனும் எமது பிரச்சினையை விளங்க முற்படுவான். நானும்அவனுடைய பிரச்சினையைப் புரிய முற்படுவேன். இதனைத்தான் நான் திருமறைக் கலாமன்றத்துக் கூடாகச் செய்ய முற்பட்டேன்." (காலம் இதழ்) எனவே திருமறைக் கலாமன்றத்துக்கூடாக அவர், வார்த்தைகளற்ற நாடகங்களைத் தயாரித்தமை தென்னிலங்கைக் கலைஞர்களுடன் உறவை ஏற்படுத்திக் கொண்டு இணைந்து செயலாற்றியமை, தென்னிலங்கையில் கிளைகளை உருவாக்கியமை, கலாசார பரிவர்த்தனைகளை பிரதேசங்களிடயே மேற்கொண்டமை, கலைஞர் எழுத்தாளர் மாநாடுகளை நடத்தியமை, மூவினக் கலைஞர்களையும் ஒன்றிணைத்த கலைப் பயணங்களையும் பட்டறைகளையும் மேற்கொண்டமை எனக் கடந்தமூன்றுதசாப்தகாலங்களும்தொடர்ச்சியாக ஈடுபட்டு வந்தார்.

### வார்த்தைகளற்ற நாடகங்கள்

அருட்கலாநிதிமரியசேவியர் அடிகள் முதலில் கையாண்ட செயற்பாடு நாடகம் மூலமாக யுத்தம் எந்தளவு தாக்கத்தை ஏற்படுத்துகின்றது என்பதனைத்தென்னிலங்கையில் சொல்வதும் இனப் பிரச்சினைக்கு யுத்தம் தீர்வாகாது என்பதனை வலியுறுத்துவதுமாகவே இருந்தது. ஆனால் அக்காலத்தில் இருந்த ஊடக சுதந்திரமின்மை மிகப் பெரிய சவாலாக இருந்த வேளையில் மரிய சேவியர் அடிகள் கண்டுபிடித்த ஒர் நாடக வடிவமே வார்த்தைகளற்ற நாடக வடிவம். (Wordless Drama) வெளிப்படையாக எதனையும்பேசமுடியாத சூழ்நிலையில் பேசாப் பொருளைச் சொல்ல அவர் உடல்மொழி மூலமான அந்த நாடக வடிவத்தினை உருவாக்கினார். 1991ஆம் ஆண்டு முதன் முதலாக அசோகா என்ற வாரத்தைகளற்ற நாடகம் தயாரிக்கப்பெற்று தலை நகரில் கொண்டுசென்று மேடையேற்றப்பட்டது. அசோகச் சக்கரவர்த்தியின் வரலாறே அந்த நாடகம். இந்தியாவில் ஆட்சிசெய்த அசோக மன்னன் யுத்த வெறியுடன் தேசங்களையெல்லாம்பிடித்து வெற்றிபெற்றுவந்தவன், கலிங்க யுத்தத்தில் மனமாற்றமடைகின்றான். யுத்தத்தால் எதனையும் சாதிக்க முடியாது என்ற தெளிவினைப் பெறுகின்றான். அதன்பின் துறவுபூண்டு புத்தமதத்தினை தழுவுவது மட்டுமன்றி உலகெங்கும் அந்த மதத்தினைப் பரப்புகின்றான். அவனால்தான் இலங்கையில் முதலாக புத்த மதம் பரப்பப்பட்டது.

அந்த மதத்தினடியாகவே இலங்கையில் சமாதானத்துக்கான யுத்தம் என் பெயரில் யுத்தம் முன்னெடுக்கப்பட்டது. எனவே ஒரு அசோகச் சக்கரவர்த்தியின் வரலாறு பல உண்மைகளை தென்னிலங்கையில் வெளிப்படுத்தியது. அக்காலத்தில் இருந்த பயணத் தடைகளுக்கூடாக கிளாலி, கொம்படிப் பாதைகளூடாக மிகுந்த சிரமத்



காவலூர் யோவான்

தின் மத்தியில் கலைஞர்களைத் தலைநகருக்குக் கொண்டு சென்று நாடகத்தை மேடையேற்றியபோது அது பல அதிர்வலைகளைத் தோற்றுவித்தது. அவர் உருவாக்கிய வடிவம் மொழியற்ற வடிவமாக இருந்த காரணத்தினால் சிங்கள மக்களுக்கும், வெளிநாட்டவர்களுக்கும் விளங்கக்கூடிய வடிவமாக இருந்தது. அது 'பேசாமலே பிரச்சினைகளைப் பேசியது' இந்நாடக முறையில் பரதம், கதகளி, கூத்து, ஊமம், போன்ற வடிவங்கள் இணைந்து நின்று உருவம் கொடுத்தன. இசையே பிரதான பேசுபொருளாக மாறியது. இசைத் தென்றல் ம.யேசுதாசன் இசை அமைப்பினைச் செய்தார், நளாயினி இராஜதுரை, பிரான்சிஸ்ஜெனம் பேர்மினஸ் போன்றோர் உதவி நெறியாளர்களாக இருந்து ஆற்றுகையை வடிவமைத்துக் கொடுத்தனர். திருமறைக் கலாமன்றத்தின் ஆற்றல் மிக்க நடிகர்கள் சிறப்பான நடிப்பினால் நாடகத்தினை சிறப்பான படைப்பாக முன்னிறுத்தினர். இந்நாடகம் பற்றிய பல விமர்சனங்கள் மூன்று மொழிகளிலும் அக்காலப் பத்திரிகைகளில் வந்தன.

### சிங்கள, தமிழ் கலைஞர்களின் 'தர்க்ஷனா

இந்த முதற்கட்ட வெற்றி அருட்கலாநிதி மரிய சேவியரை அடுத்த கட்டத்திற்குத் தாண்ட வைத்தது. தனியே யாழ்ப்பாணத்தில்இருந்தகலைஞர்களைக் கொண்டு சென்று இந்த முயற்சிகளை செய்வது 'ஒருகை தட்டலாகவே' அமையும் என்பதனை உணர்ந்து கொண்ட அடிகளார் கொழும்பிலே முதலில் ஒரு இணைப்புச் செயலகத்தினை ஏற்படுத்தினார். தொடரந்து சிங்களக் கலைஞர்களையும் உள்ளீர்த்து இந்த முயற்சிகளை மேற் கொள்வேண்டுமென்ற எண்ணத்தினைக் கொண்டு அவரோடு நட்புரிமை பாராட்டியவராக இருந்த சிங்கள நவீன நாடகத்தின் தந்தையாக அழைக்கப்படுகின்ற பேராசிரியர் எதிரி வீர சரச்சந்திரா அவர்களுடன் தொடர்பு கொண்டு அவர்களையும் இந்த முயற்சிகளில் ஈடுபடுத்த முனைந்தபோது ஒத்த கருத்தினைக் கொண்டிருந்த அவர்தனதுபூரணபங்களிப்பினைத் தருவதாக வாக்களித்ததுடன் அடுத்த முயற்சி ஆரம்பித்தது. பேராசிரியர் எதிர்வீர சரத்சந்திராவின் குழுவினரும் திருமறைக் கலாமன்ற கலைஞர்களும் இணைந்து நடிக்கின்ற வடிவமாக 'தர்ஷனா' என்ற நாடகத்தினைத் தயாரித்தார்.

யாழ்ப்பாணத்தில் இருந்து சென்ற கலைஞர்களுடன் சரத்சந்திராவின் கலைஞர்களும் கொழும்பில் ஒருவாரம் தங்கி இருந்து ஒத்திகை பார்த்து நாடகத்தினை உருவாக்கி 1994 ஆம் ஆண்டு தர்னா மிகபெரிய படைப்பாக உருவாகியது

தர்ஷனா எல்லாளன் துட்டகைமுனுவின் வரலாற்றை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்ட படைப்பு ஒரு ஓவியன் அமைதியான அழகிய இலங்கையைக் கற்பனை செய்கின்றான்.

மூவினங்களும் அதில் மகிழ்ச்சியோடு வாழுகின்றனர் அங்கே எல்லாளன் துட்டகைமுனுவின் போர் ஆரம்பமாகின்றது. போரின் உச்சக்கட்டத்தில் அந்த ஓவியனும் மக்களும் ஓடிச்சென்று அதனைத் தடுகின்றனர். போரற்ற ஒரு தேசத்தின் அழகிய உணர்வுகளைத் தமிழ் சிங்கள மக்களின் கலாசார தனித்துவங்களை அந்த நாடகம் அழகியல் பூர்வமாகச் சொன்னது. எல்லாளனாகதிருமறைக்கலாமன்ற கலைஞர் யூல்ஸ் கொலின் அவர்களும் துட்டகைமுனுவாக பேராசிரியர் எதிரி வீர சரச்சந்திராவின் பெறாமகன் ஜெகத் அவர்களும் நடித்தனர். சரத்சந்திராவின் மகள் உட்பட பல கலைஞர்கள் அதில் நடித்தனர். இசையை இசைத்தென்றல் ம. யேசுதாசன் அவர்கள் வழுங்கினார். வேட உடைகளை திருமதி லலிதா சரத் சந்திரா மேற்கொண்டார். ஒளி ஒலி அனைத்தையும் வி.யே.கொண்சன்ரைன் அவர்கள் சிங்களக் கலைஞர்களுடன் இணைந்து மேற்கொண்டார். அது தலைநகரில் மாபெரும் வெற்றியைத் தோற்றுவித்தது. அதில் ஏற்கனவே வார்த்தைகளற்ற நாடகங்களில் கையாண்ட ஊமம் கூத்து, பரதம் கதகளி போன்றவற்றுடன் கண்டி நடனமும் இணைந்து கொண்டன. மிராண்டா ஹேமலதா என்ற சிங்கள நடனக் கலைஞரும் உதவி நெறியாளர்களுள் ஒருவராக இணைந்தார். இணக்கப்பாட்டுக்கான முதல் நிகழ்ச்சியாக அது அமைந்தது. அந்த நிகழ்வின் ஒரு காட்சிக்கு அழைக்கப்பட்டிருந்த காயப்பட்ட இராணுவத்தினர் குழுமம் நாடக இறுதியில் எழுந்து நின்று உரத்த கரகோசம் வழங்குமளவுக்கு சமாதானத்துக்கான செய்தியை அந்நாடகம் வழங்கியது. பல பத்திரிகைகளில் அந் நாடகம் தொடர்பான விமர்சனங்கள்அக்காலப்பகுதியில்மூன்று மொழிகளிலும் வெளியாகியது. இந்நாடகங்களை திருமறை கலாமன்றம் தொடர்ச்சியாகபலகாலங்களில்வெவ்வேறுஅணுகு முறைகளுடன் மேற்கொண்டு வந்தது. ●

# எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பலின் கதை ஓய்ந்தாலும் அதன் பக்க விளைவுகள் தொடர் கதையாகும்

சிங்கப்பூரில் பதிவு செய்யப்பட்ட 186m நீளங்கொண்ட MV Express Pearl என்னும் சரக்குக்கப்பல் 20.05.2021 கொழும்புத் துறை முகத்திற்கு வடமேற்காகத் தீப்பற்றியது. கொழும்பு, நீர்கொழும்பு, யாஎல, வத்தளை கடற்கரையோர மக்களும், மீனவர்களும், சுமார் 80Km வரை வாழ முடியாதிருந்தது.


இதற்கு முன்பாகவும் M T New Diamond கப்பல் 2020 புரட்டாதி மாத்தில் தீப்பற்றியதும் நாம் அறிந்ததே. ஏழு மாதத்தின் பின் இன்னொரு கப்பல் தீப்பற்றியதன் விளைவு நம்மால் நேரடியாக உணரப்படாது விட்டாலும் மறைமுகமாக பல எதிர் விளைவுகளை பல ஆண்டுகளாக இனிநாம் சந்திக்க வேண்டியுள்ளோம். சமுத்திரத்தில் நடைபெற்றதால் மறைக்கப்படக் கூடியதாக இருந்தாலும் இதன் பக்க விளைவுகள் உயிரினங்களையும், சுற்றுச்சூழலையும் பல்வேறு வகையில் பாதிப்புறச் செய்யும் என்பது விஞ்ஞான ஆய்வாளர்களின் கருத்தாகும்.

Express Pearl கப்பல் தீப்பற்றிய பின் எண்ணெய்க் கழிவுகள், இரசாயனக் கழிவுகள், பிளாஸ்ரிக் கழிவுகள், நச்சுத்தன்மையான கழிவுகள் சமுத்திரத்தில் கலக்கப்பட்டது. 1486 கொள்கலன்கள் இக்கப்பலில் கொண்டுவரப்பட்டதாகவும் 74000 தொன் நிறையுடைய இரசாயனக் கொள்கலன்களும், 25 தொன் நிறையுடைய நைத்திரிக்கமிலம் ($HNO_3$) என்பனவும் காணப்பட்டதாகவும் கப்பல் பற்றிய ஆய்வறிக்கை குறிப்பிடுகின்றது. இவையனைத்தும் கடலினுள் சேர்க்கப்பட்டதனால் கடற்கரை சேதமாக்கப்பட்டதுமன்றி கடலின் கட்டமைப்பு கடற்கரைச் சுற்றுச்சூழல், கடல் வாழ் உயிரினங்கள் அனைத்தும் பாதிக்கப்பட்டதுடன் இயற்கைச் சமநிலை குழப்பமடைந்துள்ளது. பல்லாயிரக்கணக்கான கடல் வாழ் உயிரினங்கள் இறந்துமடிந்தது. இத்துடன் இரசாயனத் தாக்கங்களின் கதை முடிவதில்லை. கடலில் காணப்படும் கழிவுப் பொருட்கள் இயற்கையுடனும் உயிரினங்களின் உடலிலும் சேர்ந்து படிப்படியாக மனிதனில் பல பாதிப்புக்களை சிறிது சிறிதாக ஏற்படுத்திக் கொண்டிருக்கும்.

நைத்திரிக்கமிலம் என்பது விஞ்ஞான ஆய்வுகூடங்களில் பயன்படும் ஒரு வன் அமிலமாகும். இவ்வமிலம் கடல் நீரின் உப்புக்களுடன் இணைத்து ஐதரோகுளோரிக் கமிலத்தையும் தோற்றுவிக்கும். இதனால் நீரில் அமிலத்தன்மை அதிகரிக்கும். ஏற்கனவே கடல் நீரில் உள்ள பார உலோகங்கள் (Ai, Cd, Cr, Hg, Pb, Cu) அயன்களாக மாற இவ் அமிலத்தன்மை உதவும். பார உலோக அயன்களைக் கொண்ட கடல் நீரானது அங்கிளினது நுகர்வுக்கு அச்சுறுத்தலாக அமைகின்றது.

அத்துடன் நீரில் நைத்திரேற்று அயன்களின் அளவு அதிகரிக்கும். இதனால் நீரின் மேற்பரப்பில் அல்கா அதிகளவில் வளர்ச்சியடைந்து நீர் மேற்பரப்பை படையாக மூடும் (நற்போசணையாக்கம்) இதனால் நீரி-னுள் சூரிய ஒளி ஊடுருவ முடியாது தடுக்கப்படும். நீரின் கீழ்ப்படைகளில் ஒளித் தொகுப்பு, நிகழாமையால் நீரின் ஒட்சிசன் அளவு குறைவடைய நீர் வாழ் தாவரங்கள், விலங்குகள் இறக்கும். இறக்கும் தாவர விலங்குகள் மீது காற்று வாழ் பக்றீரியாக்கள் தொழிற்பட்டு பிரிகையாக்கம் செய்வதால் மேலும் ஒட்சிசன் செறிவு குறைய காற றின்றிய நிலைமை உருவாகும் இதனால் ஐதரசன் சல்பைட்டுத் தோன்றி துர்மணம் வீசச் செய்யும்.

இரசாயனக் கழிவுகளிலிருந்தும், கொள்கலன்க ளிலிருந்தும் கப்பலின் சிதைவு மீதிகளிலிருந்தும் பார உலோகங்கள் கடல் நீருடன் (Fe, Zn, Pb, Cu, Cd) கலக்கின்றது. இவை செறிவு ரீதியாக அதிகரிக்கும் போது மனித உடலுக்கும் ஏனைய உயிரினங்களுக்கும் பாதிப்பை ஏற்படுத்துவதுடன் நச்சுத்தன்மையானதாகவும்



அருட்சகோதரி நோமலா அன்ரனி (HC)

அமைகிறது. இப்பார உலோகங்கள் நீரில் கரைந்து அயன்களாகக் காணப்படும். இதனால் உணவுச்சங்கிலிகளின் மூலம் மனிதர்களையும் ஏனைய உயிரினங்களையும் அடைந்து பல நோய்களை ஏற்படுத்தும்.

**ஏற்படும் பாதிப்புக்கள்**

நைத்திரிக்கமிலம் - வரட்சியான தொண்டை, இருமல், நெஞ்சவலி, சுவாசிப்பதில் சிரமம்.

பார உலோகங்கள் - உயர் குருதி அமுக்கம்,
சிறுநீரகக் கோளாறு,
இனப்பெருக்க கோளாறு,
குருதிச்சோகை, (Cd, Pb, Cu, Fe, Hg)
நித்திரையின்மை,
மூளை பாதிப்பு,
பாரிச வாதம்.

கடலில் சேருகின்ற பிளாஸ்ரிக் கழிவுகள் உயிரினங்களுக்கு ஆபத்து விளைவிக்கக்கூடியவை. பிளாஸ்ரிக் பொருட்களுடன் காணப்படும் இரசாயனப் பொருட்கள் எண்ணெயில் கரைந்து உயிரினங்களினுள் ஊடுருவுகின்றன.

**மென்மையான பிளாஸ்ரிக் பொருட்கள் :-**

புற்றுநோயாக்கி, ஓமோன் சுரப்பினை கட்டுப்படுத்தும்

**நிறமுடைய பிளாஸ்ரிக் பொருட்கள் :-**

சிறு பிள்ளைகளில் உள பாதிப்பு, சிறு நீரக பாதிப்பு, நரம்பு பாதிப்பு, இனப்பெருக்க கோளாறுகள்.

இவ்வாறு எமது சூழல் பல பாதிப்புக்களை பெறுவதால் சுற்றுச்சூழல் சமநிலை குழப்பமடைவதுடன் உயிரினங்களுக்கும் அச்சுறுத்தல்கள் ஏற்படுகின்றது. இன்று நாம் எதிர்கொள்ளும் நோய்களும். இனி சந்திக்கப் போகின்ற உயிரியல் அச்சுறுத்தல்களும் செயற்கையாக மனிதனால் இயற்கைச் சூழலுக்கு ஏற்படுத்தும் பாதிப்புகளின் பக்க விளைவுகளே. நாம் வாழும் இயற்கை மட்டும் தான் பிரித்துப் பார்த்து சேதம் காட்டாத ஒன்று எம்மை வாழ வைக்கும். எமது இயற்கையை அழித்து நாம் முன்னேற நினைக்கிறோம். நாம் அழிப்பது இயற்கையை மட்டுமல்ல எமது வாழ்வையும் தான் சேர்த்தழிக்கின்றோம்.

# பிள்ளைகளுக்குப் பொறுப்புக்களை ஏற்கக் கற்றுக்கொடுப்போம்

**கு**டும்பப் பொறுப்புகளோ, பாரமோ சிறிதும் இன்றிப் பிள்ளைகளை வளர்ப்பதே அவர்களுக்கு அதிகமாக அன்புகாட்டுவதன் அடையாளம் எனப் பல பெற்றோர்கள் எண்ணுகின்றனர். இத்தகையோர் சாதாரண வீட்டுவேலைகளைக் கூடப் பிள்ளைகளைச் செய்யச் சொல்வது இல்லை.

தாங்கள் எவ்வளவு கஷ்டப்பட்டாலும் தங்கள் பிள்ளைகளுக்கு எந்தவிதக் கஷ்டமும் ஏற்பட்டுவிடக் கூடாது என அவர்கள் நினைக்கின்றனர். தங்களுக்கு எவ்வளவுதான் பொருளாதார நெருக்கடியோ வேறு பிரச்சினைகளோ இருந்தாலும் தங்கள் பிள்ளைகளுக்கு அவை தெரிந்து விடக்கூடாது, அவர்கள் வருந்திவிடக்கூடாது என அந்தப் பெற்றோர்கள் எண்ணிச் செயற்படுகின்றனர். இவ்வாறு அளவுக்கு மீறிப் பிள்ளைகளைப் பாதுகாப்பது உண்மையான அன்புடைமை ஆகாது.

பிள்ளைகளின் வளர்ச்சிக்கு நிச்சயம் அது உதவுவது இல்லை . பிள்ளைகள் வளர வளர அவர்களுடைய அறிவுக்கும் திறமைக்கும் ஏற்பக் குடும்பப் பொறுப்புகளிலும் வீட்டு வேலைகளி லும் அவர்களை அதிகம் அதிகமாக ஈடுபடுத்துவது தேவை. இது நன்முறையில் நிகழவேண்டும் எனில் பெற்றோர் பிள்ளைகளின் வயதுக்கு ஏற்பக் குடும்ப நிலை பற்றி அவர்களிடம் மனம்திறந்து பேசும் வழக்கத்தை ஏற்படுத்திக்கொள்ள வேண்டும்.

குடும்பத்தின் பல்வேறு பிரச்சினைகள், உண்மையான பொருளாதார நிலை போன்றவை பற்றிப் பிள்ளைகளுக்குத் தெரியப்படுத்துவது மட்டும் அன்று, முக்கிய குடும்ப காரியங்களில் இயன்ற அளவு அவர்களையும் கலந்து முடிவுகள் எடுப்பதே சரி யான செயல்முறை.

குறிப்பாக, தங்கள் பிள்ளைகளையும் அழைத்து அவர்களுடன் கலந்து பேசி, குடும்ப மாதாந்த வரவு செலவுத் திட்டத்தை வகுப்பது எல்லாப் பெற்றோர்களுமே எளிதாகச் செய்யக்கூடியதே.



இவ்வாறு பெற்றோர் தங்கள் பிள்ளைகளுடன் கலந்து பேசிக் குடும்பப் பொறுப்புகளிலும் வீட்டுவேலைகளிலும் அவர்களுக்கு இயன்ற பங்கு அளிப்பதால் விளையும் பயன்கள் பல. பெற்றோரும் பிள்ளைகளும் ஒரு-வரை ஒருவர் நன்கு புரிந்துகொள்கின்றனர். அவர்களுக்கு இடையே நம்பிக்கையும் நல்லுறவும் நாளும் வளர்கின்றன. பிள்ளைகளின் திறமை களும் தன்னம்பிக்கையும் பொறுப்புணர்வும் அதிகரிக்கின்றன.

வரவுக்கு மிஞ்சிய அவர்களுடைய செலவுகள் குறைகின்றன. தேவையற்ற சார்பு நிலையை விட்டு அவர்கள் பல காரியங்களைத் தாங்களாகவே சமாளிக்கக் கற்றுக்கொள்கின்றனர். இவ்வாறு நாளைய குடும்பங்களின் நல்ல தலைவர்களாக அவர்கள் இன்றே தயாரிக்கப்பெறுகின்றனர்.

முனைவர் தே.அல்போன்சு

**நன்றி** :– இன்ப இல்லறம் உறவியல் நூல்

**கொரோனா - 19 பெருந்தொற்றுக் காரணமாக எம் குடும்பங்கள் வீட்டோடு முடங்கி இருக்கும் இக்காலப் பகுதியில் பெற்றோர்கள் பிள்ளைகள் மீது கூடுதல் கவனம் செலுத்தக் கூடிய நேரம் கிடைக்கின்றது. எனவே, இக் காலத்தில் எம் பிள்ளைகளை பொறுப்புள்ளவர்களாக வாழக் கற்றுக்கொடுப்போம்.**

# திருத்தந்தையின் 34வது வெளிநாட்டுத் திருத்தூதுப் பயணம்

திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், கிறிஸ்தவ நம்பிக்கைக்கு வீரத்துடன் சான்று பகர்ந்து, அதற்காக தங்களின் உயிரையே கையளித்த பல மறைசாட்சிகள் வாழ்ந்த, பூமிக்கு, அன்னை மரியாவின் திருப்பெயரின் திருநாளான, செப்டம்பர் 12, உரோம் நேரம் காலை 6 மணிக்கு, தன் 34வது வெளிநாட்டுத் திருத்தூதுப் பயணத்தைத் துவக்கினார். திருத்தந்தை திருத்தூதுப் பயணம் மேற்கொள்ளும் ஹங்கேரி, மற்றும், சுலோவாக்கியா ஆகிய இரு நாடுகளின் மக்கள், கம்யூனிச அரசின் பல ஆண்டுகால அடக்குமுறைகள், மற்றும், மதத்தின்மீது வெறுப்பு ஆகியவற்றுக்கு மத்தியில், நற்செய்திக்குத் துணிச்சலோடு சான்று பகர்ந்தவர்கள். இத்தகைய மக்கள் வாழ்ந்த ஹங்கேரி நாட்டுத் தலைநகர் பூடபெஸ்ட்டில் நடைபெற்றுவந்த 52வது உலக திருநற்கருணை மாநாட்டை நிறைவுசெய்வதற்காக, வத்திக்கானிலிருந்து உரோம் ஃபியூமிச்சினோ பன்னாட்டு விமான நிலையம் சென்று அந்நகருக்கு, A320 ஆல் இத்தாலியா விமானத்தில் புறப்பட்டார், திருத்தந்தை பிரான்சிஸ்.

**பூடபெஸ்ட் விமானப் பயணத்தில் திருத்தந்தை**

இத்திருத்தூதுப் பயணம் பற்றிய செய்திகளை வழங்குவதற்காக, 78 பன்னாட்டு ஊடகவியலாளர்கள் திருத்தந்தையோடு பயணம் மேற்கொண்டனர். இவர்களில், ஐந்து பேர் ஹங்கேரி நாட்டவர், மற்றும், மூன்று பேர், சுலோவாக்கியா நாட்டவர். இவர்களை விமானப் பயணத்தில் முதலில் வாழ்த்திய திருத்தந்தை, தன்னோடு பயணம் மேற்கொள்ளும் சிலரைக் குறிப்பிட்டு அவர்களுக்கு தன் நன்றியைத் தெரிவித்தார். இதுநாள்வரை திருத்தந்தையரின் திருவழிபாடுகளுக்குப் பொறுப்பாளராகப் பணியாற்றிய பேரருள்திரு மரினோ குய்தோ அவர்களும், திருத்தூதுப் பயண ஏற்பாடுகளைக் கவனித்துக்கொண்டிருந்த பேரருட்திரு டியூரோன் டட்ரோனு அவர்களும் ஆயர்களாக நியமனம் பெற்றிருப்பதையும், அவர்கள், திருத்தூதுப் பயணத்தில் தனக்குத் துணைநிற்பது இதுவே இறுதிமுறை என்றும் கூறி, அவர்களுக்குத் தன் நன்றியைத் தெரிவித்தார். இன்னும், ஆயர் டட்ரோனு அவர்களின் பணியை ஆற்றவிருக்கின்ற, இந்தியரான பேரருட்திரு ஜோர்ஜ் யேக்கப் குவாக்காட் அவர்களையும் சுட்டிக்காட்டி அவருக்கும் தன் நல்வாழ்த்தைத் தெரிவித்தார். பேரருட்திரு ஜோர்ஜ் அவர்கள், எப்போதும் புன்னகையோடு காணப்படுபவர், அவர் புன்னகை மன்னன் என்றும், அவரை, புன்முறுவலோடு நோக்கினார், திருத்தந்தை. இவ்வாறு நல்லதொரு சூழலை உருவாக்கி, தனது 34வது வெளிநாட்டுத் திருத்தூதுப் பயணத்தைத் தொடங்கினார் திருத்தந்தை பிரான்சிஸ்.


## பரிசுத்த ஆவிக்கு ஜெபம்

எனக்கு ஒளியாயிருந்து உன்னத நிலையை
நான்அடைய வழிகாட்டும் பரிசுத்த ஆவியே!
உமது திருநாமம் அரச்சிக்கப்படுவதாக!
உமது அருட்கொடைகள் மூலம் என்
உள்ளத்தைப் பக்குவப்படுத்தி எனக்குத்தீமை
செய்தவரை நான் மன்னிக்க அருள் புரியும்.
என் வாழ்வின் எல்லாச் சந்தர்ப்பங்களிலும்
எனக்கு உற்ற துணையான உமக்கு இச்
சிறிய செபத்தின் மூலம் நீர் செய்யும்
சகலத்திற்கும்நன்றி கூறுகின்றேன்.
என் தேவைகள் எவ்வளவு
முக்கியமாக இருப்பினும் எக்காரணம்
கொண்டும்உம்மில் விலகாமல்
என்றும் உம்மில் நிலைத்திருப்பேனென
உறுதி கூறுகின்றேன்.
நானும் என்னால் நேசிக்கப்படும் அனைவரும்
என்றென்றும் உமது முடிவில்லா
மகிமையில் பங்கு பெற வேண்டுகின்றேன்.

ஆமென்
அடியாள்

AD 61


## நாடளாவிய திருச் செபமாலை ...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

செய்யப்படுகின்றன. தினமும் வெவ்வேறு திருத்தலங்களிலிருந்து ஒளிபரப்பாகும் திருச் செபமாலைத் தியானத்தில் இறைமக்கள் தத்தம் இல்லங்களிலிருந்து கலந்துகொள்வார்கள்.

**உபவாச செப நாள்**

இது தவிர ஒக்ரோபர் மாதம் 8ம் திகதி வெள்ளிக்கிழமை எல்லாக் குடும்பங்களும் உபவாச செபநாளாக அனுசரித்து திருச்சிலுவைப் பாதைத் தியானத்தைச் செபிக்கவும் பரிந்துரைக்கப்பட்டள்ளது.

**யாழ். மறைமாவட்டத்தில்**

மேற்படி திருச்செபமாலைத் திருயாத்திரையின்போது திருச்செபமாலைகள் செபிக்கப்பட்டு ஒளிபரப்புச் செய்யப்படும் திருத்தலங்களாக யாழ். மறை மாவட்டத்தின் சாட்டி புனித சிந்தாத்திரை மாதா திருத்தலமும் பண்டத்தரிப்பு புனித பத்திமா அன்னை ஆலயமும் எமது ஆயர் அவர்களால் பரிந்துரைக்கப்பட்டுள்ளன.

இத் திருச்செபமாலைத் திருயாத்திரைக்கான ஒழுங்குகளை இலங்கை ஆயர் பேரவையின் கண்காணிப்பில் தேசிய திருவழிபாட்டு நிலையமும், மறைமாவட்ட திரு வழிபாட்டு நிலையங்களும் இணைந்து நெறிப்படுத்துகின்றன. இவைபற்றிய மேலதிக விபரங்கள் தொடர்ந்து அறிவிக்கப்படும்.

## சுலோவாக்கியா ஆயர்களுடன் இணைந்து திருத்தந்தையின் செபம்

திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் சுலோவாக்கியா நாட்டை, அன்னை மரியாவுக்கு அர்ப்பணிக்கும் செபம் ஒன்றை, அந்நாட்டு ஆயர்களுடன் இணைந்து செபித்தார். சுலோவாக்கியா நாட்டின் பாதுகாவலரான துயருறும் அன்னை மரியாவின் திருநாள் செப்ரெம்பர்15ம்திகதிசிறப்பிக்கப்பட்டவேளையில், அந்த அன்னையின் பெயரால் உருவாக்கப்பட்டுள்ள சஸ்ரின் தேசியத் திருத்தலத்தில், திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், சுலோவாக்கியா நாட்டை அன்னைக்கு அர்ப்பணிக்கும் செபத்தை அந்நாட்டு ஆயர்களுடன் இணைந்து சொன்னார்.

*"ஏழு துயரங்களின் எங்கள் அன்னையே, சகோதரர்களாக உம் திருமுன் கூடிவந்து, ஆண்டவரின் கருணைமிகு அன்பிற்காக நன்றிகூறுகிறோம். அன்று திருத்தூதர்களுடன் மேலறையில் நீர் இருந்ததுபோல், இங்கு எங்களோடு இருக்கிறீர். திருஅவையின் அன்னையே, துயருறுவோரின் ஆறுதலே, எங்கள் பணியின் மகிழ்வுகளிலும், துயர்களிலும், உம்மிடம் நம்பிக்கையோடு வந்துள்ளோம். எங்களைக் கனிவுடன் கண்ணோக்கி, எங்களை அரவணைக்க உங்கள் கரங்களை விரித்தருளும்.*

*திருத்தூதர்களின் அரசியே, பாவிகளின் புகலிடமே, எங்கள் மனித எல்லைகளையும், ஆன்மீகக்குறைகளையும், தனிமையில்நாங்கள் அடையும் துயர்களையும் நீர் அறிவீர். உமது கனிவான தொடுதலால் எங்கள் காயங்களைக் குணமாக்கும்.*

*இறைவனின் அன்னையே, எங்கள் அன்னையே, உம்மிடம், எங்கள் வாழ்வையும், எங்கள் நாட்டையும் கையளிக்கிறோம். ஆயர்களாகிய எங்களிடை இருக்கும் ஒருங்கிணைப்பை, உம்மிடம் ஒப்படைக்கிறோம். உமது மகன் எங்களுக்குச் சொல்லித்தந்தவற்றைப் பிரமாணிக்கமுடன் செயற்படுத்த எங்களுக்கு வரங்களைப் பெற்றுத்தாரும். உம் மகன் எங்களுக்குச் சொல்லித்தந்த சொற்களில், அவர் வழியாக, நாங்கள் தந்தையிடம் வேண்டுகிறோம்".*

இவ்வாறு அன்னை மரியாவிடம் செபித்த திருத்தந்தையும் ஆயர்களும், 'விண்ணுலகில் இருக்கிற எங்கள் தந்தையே' என்ற செபத்தை இணைந்து செபித்தனர்.

## உரும்பிராயில் மறைந்த இறைபணியாளர்களின்..

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ஆகியவற்றின் ஒரு பகுதியாக உரும்பிராய் பங்கின் இரண்டாவது பங்குத்தந்தை கலைத்தூது அருட்கலாநிதி நீ.மரியசேவியர் பங்கின் கலை வளர்ச்சிக்கு ஆற்றிய பணியைப் பாராட்டி "சென்மைக்கல் ஆலய வீதி, 1ம் ஒழுங்கை" பெயர்ப்பலகை அவரது ஞாபகார்த்தமாக மூத்த கலைஞர் திரு.வி.ஜெகநாதன் அவர்களால் திறந்துவைக்கப்பட்டதுடன் உரும்பிராய் பங்கின் ஐந்தாவது பங்குத்தந்தையாகப் பணியாற்றி ஆலயத்தைக் கட்டியமைத்தவரும், ஆயரும் தமிழர்களின் உரிமைக்குரலுமாக இருந்த பேரருட்கலாநிதி இராயப்பு யோசேப்பு ஆண்டகை நினைவாக "சென்மைக்கல் ஆலய வீதி" பெயர்பலகை, மண்ணின் இரண்டாவது குருமணியும் உளவியலஎழுத்தாளருமான அருட்பணி இ.ஸ்ரலின் அவர்களால் கடந்த 01.08.2021 சம்பிரதாயபூர்வமாகத் திறந்து வைக்கப்பட்டது. இதில் சசநிலையத் தலைவர் ஞா.வொட்கின்சன், பங்குத்தந்தை அருட்பணி S.A.அருட்செல்வன் மற்றும் நிர்வாகிகள் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

## யாழில் சுவிட்சலாந்து தூதரக ...

(1ம் பக்கத் தொடர்ச்சி...)

அத்துடன் இலங்கையைத் தமது பூர்வீகமாகக் கொண்டு தற்போது சுவிஸ் பிரஜைகளாக இருக்கின்றவர்களின் குடும்ப அங்கத்தவர்கள் பலர் வடக்கு-கிழக்குப் பிரதேசங்களில் வாழுகின்ற நிலையில் அவர்களது சமூக, கலாசார, பொருளாதார தேவைகளைக் கண்காணிக்க யாழ்ப்பாணத்தில் திறக்கப்படும் சுவிஸ் தூதரக அலுவலகம் மிகவும் உறுதுணையாக இருக்கும் என்றும் குறிப்பிட்ட வடக்கு-கிழக்கு ஆயர் மன்றம், இவற்றைக் கருத்தில் கொண்டு இவ் அலுவலகத்தை யாழ்ப்பாணத்தில் விரைவில் மீளத் திறக்க உரிய நடவடிக்கைகளை எடுக்குமாறு வேண்டுகோள் விடுத்துள்ளது.


## இறைவனின் பிரசன்னத்தில் 8ம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில் 15 • 06 • 1936

விண்ணில் 07 • 09 • 2013



அமரர்

### மோசஸ் பெனடிக்ற் ஆசீர்வாதம்

"நாம் இவ்வுலகில் குடியிருக்கும்
உடலாகிய கூடாரம்
அழிந்து போனாலும்
கடவுளிடமிருந்து
கிடைக்கும் வீடு ஒன்று
விண்ணலகின் உள்ளது"

இல :- 182,
2ம் குறுக்குத் தெரு
யாழ்ப்பாணம்

அன்புடன் நினைவுகூரும்
மனைவி, உறவினர்

AD 62

## விண்ணக வாழ்வின் 31ம் நாள் நினைவஞ்சலி

மண்ணக வாழ்வில் 25 . 05 . 1947

விண்ணக வழியில் 30 . 08 . 2021



அமரர்

### சந்தனம் மருதநாயகம்

(ஓய்வுபெற்ற ஆடை உற்பத்தி முகாமையாளர்,
பண்டத்தரிப்பு ப.நோ.கூ. சங்கம்)

"இனி எனக்கென வைக்கப்பட்டிருப்பது நேரிய வாழ்வுக்கான வெற்றி வாகையே! அதை இறுதி நாளில் ஆண்டவர் எனக்குத் தருவார்" (2 திமொ 4:8)

ஆறாத் துயரில் எமை ஆழ்த்தி
ஆண்டவன் அழைப்பை ஏற்ற
எங்கள் அன்பான அப்பா,
உம் கரங்களுக்குள் அணைத்து
எம்மை வழிகாட்டி உயர்வு தந்தீர்
உம் நினைவோடு நாம் வாழ்ந்து
உமக்காக ஜெபிக்கின்றோம்
உமதான்மா உன்னதர் நிழலில்
இளைப்பாற வேண்டுகின்றோம்

இளவாலை மேற்கு,
இளவாலை.

பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்

AD 63


# மறையாசிரியர்களுக்கு யாழ். ஆயரின் உதவி

Covid -19 பெருந்தொற்றால் நாளாந்த வாழ்வு நலிவடைந்துள்ள நிலையில் மறைக்கல்வி பணியில் தம்மை இணைத்து பணியாற்றிவருகின்ற மறையாசிரியர்களுக்கு உதவிடும் முகமாக இடர்காலக் கொடுப்பனவு யாழ் . மறைாவட்ட ஆயர் பேரருட்கலாநிதி ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் அவர்களின் வேண்டுகோளுக்கமைவாக வழங்கிவைக்கப்பட்டது.

யாழ். மறைமாவட்டத்தில் உள்ள 60 பங்குகளில் பணியாற்றிவரும் தெரிவுசெய்யப்பட்ட 300 மறை ஆசிரியர்களுக்கும் மறைக்கல்வி நிலையத்தில் பணியாற்றும் நிரந்தர மறை ஆசிரியர்கள், பணியாளர்களுக்கும் மறைக்கல்வி நிலைய இயக்குநர் அருட்திரு X.W. ஜேம்ஸ் அடிகளால் இக்கொடுப்பனவு வழங்கப்பட்டுள்ளது.

யாழ். மறைமாவட்ட ஆயர் பேரருட்கலாநிதி ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் அவர்களின் வேண்டுகோளுக்கமைவாக ஜேர்மன் நாட்டில் அமைந்துள்ள Church In Need நிறுவனத்தால் இந்நிதியுதவி வழங்கப்பட்டுள்ளதுடன் இந்நிறுவனத்தாருக்கு மறைக்கல்வி நிலையம் சார்பாக மறைக்கல்வி நிலைய இயக்குநர் தமது நன்றியைத் தெரிவித்துள்ளார்.

# "ஜீவப்பிரயத்தனம்" புதிய நாடக நூல் வெளியீடு





திருமறைக் கலாமன்றத்தின் பிரதி இயக்குநரும், யாழ். கல்வி வலய நாடகமும் அரங்கியலும் பாடஆசிரிய ஆலோசகரும், ஈழத்தின் கவனத்திற்குரிய அரங்க ஆளுமையுமான திரு. யோண்சன் ராஜ்குமார் அவர்களின் "ஜீவப்பிரயத்தனம்" என்னும் ஏழுநாடகப் பிரதிகளை உள்ளடக்கிய புதிய நாடக நூல் வெளியீடு கடந்த 01.08.2021 ஞாயிற்றுக்கிழமை யாழ். பிரதான வீதியில் அமைந்துள்ள கலைத்தூது கலையகத்தில் சிறப்பாக நடைபெற்றது. திருமறைக் கலாமன்றத்தின் ஊடக இணைப்பாளர் செல்மர் எமில் அவர்களின் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக சட்டத்தரணியும் மூத்த நாடகக் கலைஞருமான தேவராஜா அவர்கள் கலந்துகொண்டார். நூலின் முதற்பிரதியை பிரதம விருந்தினர் வழங்க அதனை யாழ்ப்பாணம் கிங்ஸ்ரன் எலக்ரோனிக் உரிமையாளரும், சமூகச் செயற் பாட்டாளருமான ரமேஸ் அவர்கள் பெற்றுக்கொண்டார். கொரோனா பாதுகாப்பு நடைமுறைகளுக்கமைய நடைபெற்ற இந்நூல் வெளியீட்டில் அரங்கச் செயற்பாட் டாளர்கள், ஆர்வலர்கள் எனப் பலரும் கலந்து சிறப்பித்தார்கள்.

# மண்டைதீவில் முதியோர் மகிழ்வகத்திற்கு அடிக்கல்



மண்டைதீவு புனித பேதுருவானவர் ஆலய 125ஆவது யூபிலி ஆண்டை முன்னிட்டு மண்டைதீவு பிரதேசத்தில் பங்கு மக்களால் பல செயற்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இச்செயற்பாடுகளின் ஒரு அங்கமாக மண்டைதீவுப் பிரதேசத்தில் முதியோர் மகிழ்வகம்" ஒன்று அமைப்பதற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு 31.08.2021 கடந்த செவ்வாய்க்கிழமை அன்று நடை பெற்றது.

மண்டைதீவுப் பங்குத்தந்தை அருட்பணி. M. டேவிற் அவர்களால் இக்கட்டடத்திற்கான அடிக்கல் நாட்டப்பட்டது.

மண்டைதீவு திருஅவையின் விசுவாச வாழ்வுக்கான அடித்தளத்தையிட்டு பிரதேசத்தின் முன்னேற்றத்திற்கு பக்கபலமாக இருந்த இப்பங்கின் மூத்தோரை கௌரவிப்பதற்காகவும் மாலை நேரங்களில் அவர்கள் ஒன்று கூடி ஓய்வு நேரத்தை மகிழ்வுடன் கழிப்பதற்காகவும் இம்மகிழ்வகம் அமைக்கப்படவுள்ளது.

இம்மகிழ்வகக் கட்டிடத்திற்கான நிதி உதவியை அவுஸ்ரேலியாவில் வாழ்ந்து வரும் இப்பங்கைச்சார்ந்த ஒருவர் வழங்க முன்வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# உரும்பிராயில் மறைந்த இறைபணியாளர்களின் பெயரில் வீதிகள்



உரும்பிராய் சென்மைக்கல் ச ச நிலையம் தனது நிர்வாக எல்லைக்குட்பட்ட வீதிகளுக்கு பெயரிடும் செயல்திட்டம் மற்றும் துறைசார் சேவையாளர்களை கௌரவிக்கும் செயல்திட்டம் ☞ 11

# இறையியல் இளமாணிப் பட்டத்தைப்பெறும் யாழ். மறைமாவட்ட மாணவர்கள்



உரோமை ஊர்பானியானாப் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்ட கொழும்பு உயர் மறைமாவட்ட புனித யோசவ்வாஸ் இறையியல் கல்லூரியின் 17வது பட்டமளிப்பு விழா கடந்த 07ம் திகதி கொழும்பு பேராயர் இல்ல கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. கொழும்பு உயர் மறைமாவட்டத் துணை ஆயர் பேரருட்கலாநிதி ஜெயக்கொடி தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் 47 மாணவர்கள் தங்களுக்கான இறையியல் கற்கை நெறியை நிறைவு செய்து பட்டத்தினைப் பெற்றுக்கொண்டார்கள். இப்பட்டமளிப்பு விழாவில் யாழ் மறைமாவட்டத்தைச் சேர்ந்த 7 மாணவர்கள், தங்களுக்கான பட்டத் தினைப் பெற்றுக் கொண்டார்கள்.

# கிறிஸ்தவ நாகரிகத்துறையின் ஏற்பாட்டில் மெய்நிகர் வழியிலான விரிவுரைகள்









யாழ்ப்பாணம் பல்கலைக்கழக கிறிஸ்தவ நாகரிகத்துறையின் ஏற்பாட்டில் சமகால கிறிஸ்தவ சிந்தனைகள்" என்ற தலைப்பில் நடைபெறும் மெய்நிகர் வழியிலான விரிவுரைத்தொடரின் நான்கு உரைகள் இதுவரை நடைபெற்றன. சுற்றுச் சூழல் ஆன்மீகம்" எனும் தலைப்பில் அருட்கலாநிதி ப.யோ. ஜெபரட்ணம் அடிகளாரும், "தமிழ் கிறிஸ்தவ இறை அனுபவ வளர்ச்சி" என்ற தலைப்பில் அருட்கலாநிதி எஸ்.ஜே. இம்மானுவேல் அடிகளாரும், "பனைமர இறையியல் - தமிழ் மக்களுக்கான இறையியலாக்க முயற்சி எனும் தலைப்பில் தென்னிந்தியத் திருச்சபையைச் சேர்ந்த அருட்பணி ஏ.எஸ். தேவகுணானந்தன் அடிகளாரும், "பல்சமய இறையியல்" - அடிப்படைகள், வளங்கள், சவால்கள் தமிழ் கிறிஸ்தவ இறையியல் பார்வையில் எனும் தலைப்பில் அருட்கலாநிதி ஜெராட் றொசைரோ, அமதி அடிகளாரும் தங்களது உரைகளை நிகழ்த்தி உள்ளனர்.

மெய்நிகர் வழியில் நடைபெற்ற இந்நிகழ்வில் பல்கலைக்கழக மாணவர்கள், பேராசி ரியர்கள், விரிவுரையாளர்கள், குருக்கள், துறவிகளென இலங்கையிலும் உலகின் பல்வேறு நாடுகளிலிருந்தும் நூற்றுக்கும் அதிகமானவர்கள் இணைந்திருந்தார்கள்.

# அன்பிய ஆண்டில் சமூக வலைத்தள செயலிகள் வழியாக கவிதை, கட்டுரை, பேச்சுப் போட்டிகள்




யாழ். மறைமாவட்டத்தில் இவ்வருடம் அன்பிய ஆண்டாகப் பிரகடனப்படுத்தப்பட்டு அன்பிய வாழ்வை ஊக்குவிப்பதை அடிப்படையாகக் கொண்டு அன்பிய ஆணைக் குழுவால் பல செயல்திட்டங்கள் மறைமாவட்ட ரீதியாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இதன் ஒரு அங்கமாக அன்பிய வாழ்வை மையப்படுத்தி ஒவ்வொரு மாதமும் ஒவ்வொரு போட்டி நடாத்த ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. கொவிட்19 முடக்க நாட்களில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இப்போட்டிகளில் வீட்டிலிருந்தபடியே போட் டியாளர்கள் இலகுவாகப் பங்குபற்ற WhatsApp, Viber சமூக வலைத்தள செயலிகள் 0715665212 எனும் இலக்கத்தில் யாழ் அன்பியம்" எனும் பெயரில் உருவாக்க ப்பட்டுள்ளது. கட்டுரை, கவிதை, பேச்சு மற்றும் ஓவிய ஆக்கங்களை மேற்குறிப்பிட்ட செயலி இலக்கத்திற்கு புகைப்படமாகவோ அல்துை போட்டியின் தன்மைப்கேற்ப காணொளியாகவோ அனுப்ப முடியும். ஆக்கங்களை அனுப்புபவர்கள் முகவரி, பெயர், பங்கு, வலயம், மற்றும் அன்பியத்தின் பெயர் என்பவற்றினைக் குறிப்பிட்டு அனுப்ப முடியுமென யாழ் மறைமாவட்ட அன்பிய இயக்குநர் அருட்திரு A. மில்பர்வாஸ் CMF அடிகள் தெரிவித்துள்ளார்.

இப்பத்திரிகை புனித வளன் கத்தோலிக்க அச்சக முகாமையாளரால் இல. 360, பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2021ம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 19ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.